Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Admission open
No Prior Qualifications
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
BIT-Degree University of Colombo
20000 Rs only 1st Year
CIMA-UK
14000 Rs. only
founation level Course fee
Computer Engineering - USA
Government Scholorship USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Free :BCS-UK, IELTS, Hardware, ICDL
(C/1284)
MCS
Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction


முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மாசி 09 செவ்வாய்க்கிழமை (21.02.2012) பக்கங்கள் 16 ஓசை – 143










# அரசியல் அமைப்பில் மாற்றம் வேண்டும்

## ஆளும்தரப்பு கூட்டணிக் கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

நடைமுறையில் இருக்கும் அரசியல் அமைப்பில் மாற்றம் செய்யப்படவேண்டும் என்றும் அந்த மாற்றங்கள் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

லங்கா சமசமாசக்கட்சி, ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, ஸ்ரீலங்கா மகாஜனக்கட்சி, தேச விடுதலை மக்கள் கட்சி ஆகிய ஐந்து கட்சிகளும் இணைந்தே இக்கோரிக்கையை முன்வைத்துள்ளன.

மக்களின் அபிலாஷைகளை நாடாளுமன்றில் நிறைவேற்றக் கூடிய வகையில் அரசியல் அமைப்பில் மாற்றம்கொண்டு வரப்பட வேண்டுமென இக்கட்சிகள் கோரியுள்ளன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள தற்போதைய அரசியல் அமைப்பு இரத்துச் செய்யப்பட வேண்டும்.

மக்களினால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றினால் அனைத்து நிர்வாக நடவடிக்கைககளும் மேற்கொள்ளக் கூடிய வகையில் மாற்றம் செய்யப்பட வேண்டும்.


அரசியல் அமைப்பின் ஜனநாயக தன்மையை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லா தொழிக்கப்படும் என அரசாங்கங்கள் உறுதியளித்த போதிலும் இதுவரையில் நடைமுறைப் படுத்தப்படவில்லை என சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

## பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு

வேலையில்லா பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக்கொள்ளும் விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 31 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ள அதேநேரம், குறித்த விண்ணப்பங்களை ஒவ்வொரு மாவட்ட செயலகங்களிலும் பெற்றுக் கொள்ள முடியுமென பொதுநிருவாக அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், வெற்றிடங்களுக்கான மாதிரி விண்ணப்பங்கள் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டன. அரசாங்க சேவையில் இணைத்துக்கொள்ளும் பட்டதாரிகளுக்கு குறைந்தது 6 மாதம் முதல் ஒரு வருடம் வரையிலான பயிற்சியை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி (15 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் போராட்டம் நசுக்கப்படவில்லை



(கொழும்பு)

ஜனநாயக ரீதியாக நடததப்படும் மக்கள் போராட்டங்கள் எதுவும் தடுக்கப் படவில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எனினும், எந்தவொரு தரப்பினரும் ஜனநாயக நெறிகளுக்கு அமையவே போராட்டங்களை நடத்தவேண்டும். சட்ட மீறல்களில் ஈடுபடுவதனை அனுமதிக்க முடியாது.

எந்தவொரு போராட்டத்தையும் தடுத்து நிறுத்த பாதுகாப்புத் தரப்பினர் முயற்சிக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியோ, ஜே.வி.பி.யோ அல்லது வேறும் அரசியல் கட்சியோ ஜனநாயக ரீதியில் நடத்தும் போராட்டங்களை பொலிஸார் தடுக்கவில்லை. எனினும், போராட்டம் நடத்துவோர் பொலிஸார் மற்றும் பாதுகாப்பு தரப்பினருடன் மோதும் நோக்கில் செயற்படுகின்றனர். கொழும்பு கோட்டே ரயில் நிலையத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டபோது, அந்தப் பகுதிக்குச் செல்லவேண்டாம் என பொலிஸாருக்கு உத்தரவிட்டேன்.

எனினும், ஆர்ப்பாட்டக்காரர்கள் அலரி மாளிகை (15 ஆம் பக்கம் பார்க்க)

## பறிக்கப்படுகிறது வாழும் உரிமை

(கொழும்பு)

வாழும் உரிமை நாளுக்கு நாள் பறிக்கப்பட்டு வருகிறது இதை எதிர்த்து நடத்தப்படும் எதிர்க்கட்சிகளின் போராட்டங்களை முடக்கும் முயற்சி கண்டனத்திற்குரியது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். மக்களை பாரிய அளவில் நெருக்கடிக்குள் ஆழ்த்தும் வகையில் அரசாங்கம் எரிபொருளுக்கான விலையை உயர்த்தியுள்ளது. இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு வெளியிடும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சியினால் அமைதியான முறையில் நடத்தப்பட்ட போராட்டம் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தினர்.

இந்த நிலையில் அரசியல் அமைப்பின் பிரகாரம் ஜனநாயக ரீதியில் எதிர்ப்பை வெளியிடக்கூட மக்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை.



நல்ல வழியிலோ அல்லது வேறும் வழிகளிலோ மக்கள் போராட்டங்கள் தடுக்கப் படுகின்றன. விவசாயிகள், தொழிலாளிகள், மீனவர்கள் உள்ளிட்ட பலரும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் அதிருப்தி அடைந்துள்ளனர். மக்களின் எதிர்ப்பை தடுத்து நிறுத்தும் நோக்கிலேயே நாடு முழுவதிலும் பாதுகாப்பு தரப்பினர் ஆயத்த நிலையில் (15 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய உதவியுடன் வீடமைப்பு தாமதத்தை நீக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்திய உதவியுடனான வீடமைப்புத் திட்டம் பல்வேறு காரணங்களால் யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கான 49 ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் மேலும் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இந்திய அரசாங்கத்தின் வீட்டுத்திட்டத்தில் முன்னோடி வீட்டுத்திட்டத்தில் யாழ். குடாநாட்டில் 150 வீடுகள் அமைக்க திட்டமிடப்பட்டிருந்தது. இவற்றில் 48 வீடுகள் அரியாலையில பூர்த்தியாக்கப்பட்டு கடந்த மாதம் 18 ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவினால் திறந்துவைக்கப்பட்டது. இவ்வீடுகள் அமைப்பின் தாமதத்திற்கு இந்திய ஒப்பந்தகாரர்களே காரணம் என்று தகவல்கள் வெளியாகின. பின்னர் பயனாளிகளுக்குப் பணத்தைக் கொடுத்து வீட்டுத திட்டத்தை அமைப்பதற்கு இரு (15 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் குதிக்கத் திட்டம்

(கொழும்பு)

எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து அனைத்து பல்கலைக்கழகங்களினதும் கல்விசாரா ஊழியர்கள், தமக்கு சம்பள உயர்வு வேண்டுமென அரசாங்கத்திடம் வலியுறுத்தும் முகமாக இவ்வாரம் 48 மணிநேர வேலை நிறுத்தத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர். இவ்வாரம் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இவர்கள் வேலை (15 ஆம் பக்கம் பார்க்க)

## பாணின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கும்?

(கொழும்பு)

இந்த வாரம் அரசாங்கத்துடன் சுமுகமான இணக்கப்பாடொன்று காணப்படாதுவிடின் பாணின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்படுமென அனைத்து இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

மேலும் அரசாங்கத்தால் எங்களுக்கு வரிச்சலுகை வழங்கமுடியாதெனின் பாணின் விலையை 5 ரூபாவால் அதிகரிப்பதற்கான நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்படுவோம என அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் வர்த்தக அமைச்சரை சந்திப்பதற்கு அனைத்து இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் முயற்சித்து வருவதாகவும் பாணிற்கான வரியை நீக்கத் தவறினால் வெள்ளிக்கிழமையிலிருந்து பாணின் விலையை அதிகரிப்பதற்கு நிச்சயமாக இட்டுச் செல்லுமென அனைத்து இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

## குருநகர் வைத்தியசாலையில் அடிப்படை வசதிகள் இல்லை

### ஆபத்தின் விளிம்பில் பிரசவம்

குருநகர் சவச்சாலைச் சந்தியில் அமைந்துள்ள அரச பொதுவைத்திய சாலையில் நோயாளர்களுக்கான அடிப்படை வசதிகள் இல்லாததால் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரசவத்திற்கு அனுமதிக்கப்பட்ட பெண்ணொருவர் அங்குள்ள வசதியீனங்கள் காரணமாக உயிராபத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதாக தெரியவருகிறது. அப்பெண்ணுக்கு அதிகாலையில் பிரசவம் நடந்தபோதிலும் பலமணி நேரமாகியும் நஞ்சுக்கொடி அகலவில்லை. (15 ஆம் பக்கம் பார்க்க)

## எலும்புக்கூடு மீட்பு

காணாமற்போன் பெண் ஒருவரின் எலும்புக்கூடு நெடுந்தீவில் மீட்கப்பட்டிருக்கிறது. கடந்த வருடம் கார்த்திகை மாதம் நெடுந்தீவு 15 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி மலர்ராணி என்பவர் காணாமற் போயிருந்தார்.

நேற்று நெடுந்தீவு கும்மிட்டுதில்லைப் பாலத்தடியிலிருந்து எலும்புக்கூடு ஒன்று மீட்கப்பட்டிருக்கிறது. இந்த எலும்புக்கூடு மேற்படி காணாமற்போன பெண்ணுடையது என்பதை அவரது மகள் அடையாளம் காட்டியதாக நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் தானியேல் றெக்சியன் தெரிவித்தார்.

# வாகன வரி அனுமதிப்பத்திரம் யாழ். நகரில் தீவிர சோதனை

(யாழ்ப்பாணம்)

இந்த ஆண்டுக்கான வாகன வரி அனுமதிப் பத்திரங்களை சோதனையிடும் நடவடிக்கைகளை யாழ். பொலிஸார் தீவிரமாக்கியுள்ளனர்.


யாழ். நகருக்குள் நேற்றுப் பிரவேசித்த மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்கள் யாழ். போக்குவரத்து பொலிஸாரின் திடீர் பரிசோதனை நடவடிக்கைக்குட்பட்டன.

2012 ஆம் ஆண்டுக்கான வரி அனுமதிப் பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் ஆவணங்கள் குறித்து யாழ். போக்குவரத்து பொலிஸாரின் சோதனை நடவடிக்கை அமைந்திருந்தது.

யாழ். பிரதான வீதி, காங்கேசன்துறை வீதி, மற்றும் யாழ். நகரின் இதர பகுதிகளிலும் போககுவரத்து பொலிஸார் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த பகுதிகளில் பயணித்த வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு அவற்றுக்குரிய வரி அனுமதிப் பத்திரம், வாகன சாரதி அனுமதிப் பத்திரம் போன்றவை பரிசீலிக்கப்பட்ட பின்னரே செல்ல அனுமதிக்கப்பட்டது.

இதனால் குறித்த பகுதிகளில் பயணிகள் தமது வாகனங்களுடன் வரிசையில் நிற்கவேண்டியேற்பட்டது. (பா)



திருநெல்வேலி பழங்கிணற்றடி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்றபோது... (137)

# பூநகரி விபத்துச் சம்பவம் தொடர்ந்தும் விசாரணை

(பூநகரி)

பூநகரி - 4 ஆம் கட்டை மன்னார் வீதியிலிருந்து வவுனியாவுக்கு அதிகாலை 5.00 மணிக்கு புறப்பட்ட பேருந்தின் பின் சில்லில் நசியுண்டு இறந்த பூநகரியைச் சேர்ந்த செல்வரத்தினம் நியூட்வாசன் (வயது - 23) மரணம சம்பந்தமாக கிளிநொச்சி நீதி மன்ற நீதிபதியின் விசாரணையைத் தொடர்ந்து சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பேருந்தின் சாரதியும் நடத்துநரும் பூநகரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை நடைபெறுகிறது. பேருந்து பொலிஸ் பாதுகாப்பில் பொலிஸ் நிலையத்தில் உள்ளது. (112)

# பொது அமைப்புக்கள் ஒலிபெருக்கியைப் பெறலாம்

## அனர்த்தங்களின் போது மட்டும்

(யாழ்ப்பாணம்)

அனர்த்தங்களின் போது ஏற்படும் அவசர நிலையினை பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தும் அறிவிப்புக்களைச் செய்யவென மைக்குகள் (ஒலிபெருக்கி) தேவையேற்படுமிடத்து தம்மிடமிருந்து பெற்று பயன்படுத்த முடியுமென யாழ். செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு பொது அமைப்புக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

தீ விபத்து, வீதி விபத்து, புயல், கடற்கொந்தளிப்பு, சுனாமி, வெள்ளப்பெருக்கு போன்ற அனர்த்தங்களின்போது பொது மக்கள் அவற்றில் சிக்கக்கூடும். இச்சூழ்நிலைகளின்போது சம்பவ இடங்களுக்கு நெருக்கமாகச் சென்று அவர்களை மீட்கவோ சம்பவத்தில் பாதிப்பு ஏற்படாமல் இருக்கவோ இத்தகைய மைக்குகள் மூலமாக அறிவிப்புக்களை வெளியிட முடியும். அதன்மூலம் ஏற்படும் உயிரிழப்புக்களைக் குறைக்க முடியும்.

எனவே இத்தகைய மைக்குகள் யாழ். செயலக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டிருக்கின்றன. வெளிநாடுகளிலிருந்து நன்கொடையாகக் கிடைத்த இக்கருவிகள் மூலமாக பொதுமக்கள் பயனடையும் நோக்கமாக அனர்த்தங்களின் போது ஏற்படும் நெருக்கடியான சூழலைப் போக்குமுகமாக பொது அமைப்புக்கள் இக்கருவிகளைப் பெற்று பயனடையுமாறு யாழ். செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

தமது தேவை முடிவடைந்ததும் மீளவும் இக்கருவிகளை திரும்பவும் யாழ். செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவில் ஒப்படைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (பா)

# கீரிமலை நகுலேஸ்வரத்தில் பெருமளவான மக்கள் வழிபாடு



மகாசிவராத்திரி விரதத்தை முன்னிட்டு நேற்று பஞ்ச சிவத் தலங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வரத்தில் தென்னிலங்கை சுற்றுலாப்பயணிகள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர். இதேவேளை இலங்கையில் பாடல் பெற்ற தலங்களான மன்னார் திருக்கேதீஸ்வரம், திருகோணமலை திருக்கோணேஸ்வரம், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர், மற்றும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆகிய சிவன் ஆலயங்களில் மகாசிவராத்திரி பூசைகள் சிறப்பாக நடைபெற்றன.

போர்ச் சூழல்களால்' பாதிக்கப்பட்டிருந்த நகுலேஸ்வரம் அண்மையில் கும்பாபிஷேகம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்தியக் கோயில்களில் உள்ளது போல கோவில் கரும பீடத்தில் பணம் பெற்றுக்கொண்டு பொதி செய்யப்பட்ட நைவேத்தியம் வழங்கப்பட்டது. இது யாழ்ப்பாணத்தில் முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

## முன்னேஸ்வரத்தில் நகை, பணம் கொள்ளை

(சிலாபம்)


சிலாபம் முன்னேஸ்வரம் கோவிலின் அம்மன் சிலையிலிருந்து ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான தங்க அட்டியலொன்றும் உண்டியலிலிருந்து சுமார் 100,000 ரூபா பணமும் திருடப்பட்டுள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த 18ஆம் திகதி காலை இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருப்பாடுகளின் காட்சி பிரதி வழங்கும் நிகழ்வு

(கொழும்புத்துறை)

யாழ். திருமறைக் கலாமன்றத்தால் வருடந்தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பைச் சித்தரிக்கும் மாபெரும் தயாரிப்பாகிய திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக் காலத்தின் ஆரம்ப தினமான நாளை மாலை 4.30 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கொழும்புத்துறை தூய சவேரியார் குருத்துவக் கல்லூரியின் இறையியல்



துறைத் தலைவரான அருட்பணி எஸ்.வி.பி.மங்களராஜா அடிகள் கலந்துகொண்டு இவ்வாற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்களுக்கான பிரதிகளை வழங்கி சிறப்பிப்பதுடன், ஆசியுரையும் வழங்குவார்.

பிரதி வழங்கும் நிகழ்வில் வழமையாக திருபாடுகளின் நாடகத்தில் பங்கேற்று நடிக்கின்ற அனைத்து கலைஞர்களையும் இம்முறை புதிதாக இணைந்து நடிப்பதற்கு விருப்பமுடையவர்களையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (52)


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1285)

### கணினி திருத்தம் (Computer Repair)


உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1305)


# நிர்வாகத் தெரிவு

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் ப.நோ.கூ. சங்கத்தின் நவாலி கிளை 6 இன் நிர்வாக சபைத் தெரிவு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இதில் தலைவராக செ.நாகரத்தினம், உபதலைவராக க.தர்மலிங்கம், செயலாளராக பி.பொன்னுத்துரை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன், 4 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (104)



மற்றவர்களுடைய துன்பத்தைக் கண்டு இரக்கப்படு; ஆனால் உன்னுடைய சொந்த துன்பங்களை உன்னிடமே வைத்திரு!

- அகிடன் பிரபு -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## மனிதர்களாக வாழும் நம்பிக்கை!

ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் 19 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகிறது. அதில் கலந்துகொள்ளும் இலங்கைத் தூதுக்குழுவின் ஒரு பகுதியினர் இன்று ஜெனீவா பயணமாகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் மகிந்த சமரசிங்க, நிமல் சிறிபால டி சில்வா, ஜி.எல்.பீரிஸ் உள்ளிட்ட ஐம்பதுக்கும் மேற்பட்டோர் ஜெனீவா செல்கின்றனர்.

இலங்கைக்கு எதிராக இம்முறை பிரேரணை ஒன்று கொண்டு வரப்படுமெனவும், அதற்கு அமெரிக்கா ஆதரவு வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த விடயத்தில் இலங்கைக்கு ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே இத்தனை பேரும் ஒருவாரம் முன்னதாகச் செல்கின்றார்கள்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்று ஒருசில மாதங்களே கடந்துள்ளன என்றும், அதன் பரிந்துரைகளை அமுல்படுத்த காலஅவகாசம் தேவை என்றும் இலங்கை அரசாங்கத் தரப்பில் தெளிவுபடுத்தப்படும் என்று கூறப்படுகின்றது.

தவிரவும் ஆணைக்குழுவின் பரிந்துரையின் படியான இராணுவ உள்ளக விசாரணையையும் அறிவித்திருப்பதானது அரசாங்கத்தைச் சிக்கலிலிருந்து விடுவிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சரி, தமிழ்த் தரப்பிலிருந்து கடந்த சில மாதங்களாக, குறிப்பாகக் கூட்டமைப்பினரின் அமெரிக்க விஜயத் தோல்விக்குப் பிறகு, இந்த ஜெனீவா மகாநாட்டிலேயே நமக்கான அதிசயம் நிகழப்போகிறது என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. இப்போது சிலர் நழுவமுற்பட்டாலும், முந்திய கட்டுரைகளும், பேச்சுக்களும் சாட்சியங்களாக இருப்பதை அழித்துவிட முடியாது.

இதைச் சொல்வது வெறுமனே அவர்களைக் குற்றம் சாட்டுவதற்கல்ல. காலத்திற்குக் காலம் இவ்விதமான நம்பிக்கைகளை விதைத்து வளர்ப்பதும், பின்னர் அவை நடைபெறாமல் போவது பற்றி எந்த சுயவிமர்சனமோ ஆய்வோ மேற்கொள்ளாமலே, அடுத்தும் இதே போன்ற நம்பிக்கையிலேயே மக்களை விழவைப்பதுமான இந்த அபத்தம் தொடர்வது ஏன் என்று நாம் சிந்திக்கவேண்டும் என்பதற்காகத்தான்.

இந்த நாட்டில் நமது தமிழ்த் தேசியம் போலவே, மறுதரப்பான சிங்கள தேசியத்தையும் கடந்த கால நடவடிக்கைகள் மூலம் வெகு தீவிரத்தன்மையுடன் வளர அனுமதித்து விட்டிருக்கின்றோம்.

அந்த சிங்கள தேசியத்தை மறந்துவிட்டு அல்லது அதை இல்லாதது போல் முற்றாக விலக்கி வைத்துக்கொண்டு நமது தமிழ்த் தேசிய கோரிக்கைகளை முன்வைத்துக்கொண்டிருந்தால், எந்த வெளிசக்திகளாலும் அதற்கு உதவ முடியாது என்ற உண்மையைப புரிந்துகொள்ள மறுக்கிறோம்.

எங்களுக்குத்தான் பிரச்சினை. எனவே சிங்களவர்களைப் பொருட்படுத்தாது இலங்கை அரசைச் சர்வதேசம் அழுத்தவேண்டும் – அழுத்தும் என்று பாமரத்தனமாக எதிர்பார்க்கின்றோம். இதை அவர்கள் தங்கள் நலன்களுக்காகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். மற்றபடி நம்முடைய தீர்வுக்கு, நாம் அரசாங்கத்துடன் பேசவேண்டும் என்பதையே பலபடியாகவும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதை நாம் புரிந்துகொள்ள – ஒப்புக்கொள்ள விரும்பாததுதான் பிரச்சினையாகத் தெரிகிறது.

இலங்கை அரசுடனான பேச்சில் வெற்றி என்பது, சிங்கள மக்களிடமும் நம் கோரிக்கைகளின் நியாயத்தன்மை உணரப்படுவதனூடாகவே சாத்தியம். மோதல் போக்குடனான பேச்சுக்கள் மூலம் சிங்கள தேசியத்தை உசுப்பித் தீவிரப்படுத்தி விட்டுக்கொண்டு, இந்த நாட்டிற்குள் ஒரு தீர்வை நாம் கண்டுவிட முடியாது என்பதே யதார்த்தம்.

தமிழ்த் தேசிய உணர்வில் மட்டுமே நியாயம் இருக்கிறது என்று கருதிக்கொண்டு சிங்கள தேசியத்தைப் புறக்கணித்துப் பொங்குவது என்பது தனிநாட்டுக்கான பொருதலாகத்தான் இருக்கும். அது சாத்தியம் என்று நம்மில் எத்தனை பேர் இன்னும் கருதுகின்றார்கள் என்று கணக்கிட்டுக் கொள்ளவேண்டும்.

சிங்கள தேசியத்துடன் உரையாடி அதை விரோதமற்ற நிலையில் வைக்கவேண்டும் என்பது எதிரிகளிடம் போய் கொஞ்சுவதா என்ற ரோசத்தையே நமக்கு உண்டாக்கும் என்றால், நாம் மனிதர்களாக வாழும் நம்பிக்கை அற்றவர்கள் என்பதே பொருள்! - ஆசிரியர்

# எரிபொருள் மானியத்தை வழங்காமல் விலைகளைக் குறைக்க வேண்டும்

## ஐ.தே.க. தயாகமகே தெரிவிப்பு

(கொழும்பு)

மீனவர்களுக்கு எரிபொருள் மானியத்தை வழங்குவதை விடுத்து விலையைக் குறைத்து நிவாரணம் வழங்க வேண்டுமென ஐ.தே.க.வின் தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவருமான தயாகமகே தெரிவித்துள்ளதுடன் எமது கடல் எல்லையில் மீன்பிடிக்கும் உரிமையை சீனாவுக்கு அரசாங்கம் வழங்கியுள்ளதாகவும் குற்றம் சாட்டினார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர இவ்வாறு தெரிவித்தார். இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இலங்கை வரலாற்றில் எந்தவொரு அரசாங்கமும் மண்ணெண்ணையின் விலையை இன்றைய அளவுக்கு உயர்த்தியதில்லை. இதனால் குப்பி விளக்கில் ஒளியைப் பெறும் மலையக மக்கள் கிராமங்களில் வாழும் மக்கள் ஏன் கொழும்பிலும் இந்த நிலையில் வாழ்வோரும் பெரும் நெருக்கடிக்குள் தள்ளிவிடப்பட்டுள்ளனர்.

மீனவர்கள் தமது படகுகளை பெற்றோலில் இயக்கிய பின்னர் மண்ணெண்ணை மூலமே அபபடகுகள் இயங்கும். இப்போது எண்ணெய் விலையேற்றத்தால் மீனவர்கள் தமது தொழிலைச் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தியதால் இரு பிள்ளைகளின் தந்தையொருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் பலியாகியுள்ளார். மீனவர்கள் மானியங்களை கேட்கவில்லை விலைக்குறைப்பையே கேட்கின்றனர்.

மானியங்கள் வழங்குவதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அலுவலகங்கள் திறக்கப்பட்டு செலவினங்கள் அதிகரிக்கும். இவையனைத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது விலைக்குறைப்புக்கு பெருமளவு நிதி செலவாகின்றது. எனவே மீனவர்களுக்கு எரிபொருள் விலைக்கழிவை வழங்க வேண்டும். மானியப் பணத்தை திறைசேரியூடாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பி வைப்பதன் மூலம் குறைநத விலைக்கு எரிபொருட்களை வழங்க முடியும்.

இன்று எமது நாட்டின் ஆழ்கடல் பிரதேசம் சீனாவிடம் முழுமையாக கையளிக்கப்பட்டுள்ளது. பெரிய கப்பல்களை பயன்படுத்தி எமது மீன்வளத்தை சீனா கொள்ளையடித்துச் சென்று டின்களில் அடைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றது.

அமைச்சர்களால் இன்று தீர்மானங்களை எடுக்க முடியாது பொம்மைகளாகவே உள்ளனர். கூட்டுத்தாபன, திணைக்களங்களின் தலைவர்கள் செயலாளர்களின் ஆதிக்கமே தலைதூக்கியுள்ளது என்றும் தயாகமகே தெரிவித்தார்.

## மதுவரி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சியில் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட உதவி மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கான அலுவலகம் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு கிளிநொச்சியில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மதுவரி ஆணையாளர் நாயகம் வி.எம். கப்புராராச்சி அலுவலகத்திற்கான நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கண்டாவளைப் பிரதேச செயலர், யாழ். மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி ந.கிருபாகரன், மதுவரி நிலைய உயர் அதிகாரி எனப்பலரும் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமாக மதுபான உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடுவோரை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் மதுவரி ஆணையாளர் அலுவலகம் திறந்து வைகக்கப்பட்டுள்ளதாகவும் சட்டவிரோத உற்பத்திகளையும் விற்பனையில் ஈடுபடுவோர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மதுவரி நிலைய பொறுப்பதிகாரி ந.கிருபாகரன் தெரிவித்தார். (எஸ்)

## 25 மெற்றிக்தொன் நெல் கடத்தல் முயற்சி முறியடிப்பு

பொலனறுவை தியபெதும நெற்களஞ்சியத்திலிருந்து 25 மெற்றிக்தொன் நெல்லைக் கடத்த நெல் சந்தைப்படுத்தும் சபை அதிகாரி ஒருவர் மேற்கொண்ட முயற்சியை வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ முறியடித்துள்ளார்.

இந்த உத்தியோகத்தர் 4 லொறிகளில் 25 மெற்றிக்தொன் நெல்லை கடத்திக்கொண்டு சென்றபோது பிடிபட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

தனக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைத்ததைத் தொடர்ந்து அந்தப் பகுதிப் பொலிஸாருக்கு அறிவித்தவுடன் அவர்களும் நன்கு செயற்பட்டு இந்த லொறிகளை மடக்கியதாகவும் அமைச்சர் குறிபபிட்டார். இது தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## டிப்ளோமா பரீட்சை

(கொக்கிளாய்)

தேசியக் கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பரீட்சை (2ஆம் வருடம்) எதிர்வரும் 25, 26 ஆம் திகதிகளில் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் உரிய ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தேசிய கல்வி நிறுவகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (17)

# நான்கு பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டனர்

(கொழும்பு)

பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் மூவர் உள்ளிட்ட நான்கு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாறறம் வழங்கப்பட்டுள்ளது. கடமை தேவை நிமிர்த்தம் பொலிஸ் மா அதிபர் இந்த இடமாற்றங்களை வழங்கியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன கூறியுள்ளார்.

இதற்கமைய பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆர்.எம்.ரத்நாயக்க, அநுராதபுரம் பொலிஸ் நிலையத்திலிருந்து நானுஓயா பொலிஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் யூ.எச்.சிறிபால கல்முனை கடற்கரை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, அக்கரைப்பற்று பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் டி.ஈ.ஜே.பீ.நாணயக்கார கல்முனை தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டுள்ளார். பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆர்.எம்.யூ.எல்.எச்.மொஹிதீன் வவுனியாவில் இருந்து அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுபபதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## கண்ணீர்ப் புகைக் குண்டுகள் இறக்குமதி

(கொழும்பு)

ஒரு தொகுதி கண்ணீர்ப் புகைக் குண்டுகளை இறக்குமதி செய்யவுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

வருடத்தின் ஆரம்பத்தில் இவ்வாறு பொலிஸாருக்குத் தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. அந்த வகையில் இந்த முறை கண்ணீர்ப் புகைக் குண்டுகளும் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அண்மைக் காலமாக இலங்கையில் ஏற்பட்ட கலவரங்களைக் கட்டுப்படுத்த, அதிக அளவான கண்ணீர்ப் புகைக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இறுவட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் புகழ் மிக்க மாவிட்டபுரம் கந்தனின் சிறப்புகளை வெளிப்படுத்தும் மாவை வேலாயுதன் எனும் இசை இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 25ஆம்திகதி சனிக்கிழமை மாலை 3மணிக்கு ஆலய முன்றலில் இடம் பெறவுள்ளது.

மாவை ஆதீனத்தின் ஆதரவில் வெளிவர உள்ள இந்த இசை இறுவட்டு பிரபல பாடகர்களின் குரலில் வெளிவர உள்ளமை குறிப்பிடத்தக்கது. (54)

# உயர்நிலை மனிதர்கள் உருவாவதற்கு ஆசிரியர்களே அடித்தளமானவர்கள்

## வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர்

(திருநெல்வேலி)

ஆசிரியர்கள் புனிதத் தன்மை மிக்கவர்கள். அவர்களால்தான் உலகில் பல அறிஞர்கள் தோன்றினார்கள். சமூகத்தில் அந்தஸ்தும் கௌரவமும் கொண்டவர்கள் ஆசிரியர்கள். அவர்களைக் கனம் பண்ண வேண்டியது அனைவரது கடமையாகும் என வடமாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கண்டி வீதியில் இடம்பெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைமைப் பணிமனைத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பத்து வருடங்கள் நான் ஒரு ஆசிரியராகக் கடமையாற்றினேன் எனக் கூறும்போது எனக்குப் பெருமையாகவுள்ளது. ஆசிரியத் தொழில் அளப்பரிய சேவை நிறைந்தது. பெற்றோருக்கு அடுத்தபடியாக போற்றப்பட வேண்டியவர்கள் ஆசிரியர்களேயாவர்.

நாட்டில் உயர் கல்விமான்களும், வைத்தியர்களும், பொறியியலாளர்கள், பேராசிரியர்கள், விஞ்ஞானிகள் எனவும் பல உயர்நிலை மனிதர்கள் உருவாவதற்கு ஆசிரியர்களே அடித்தளமானவர்கள்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நாட்டிலுள்ள ஆசிரியர்களை ஒழுங்கமைப்போடு ஒன்றிணைத்து அவர்களது தேவைகள், வசதிகளை நன்கறிந்து அவர்களுக்குச் சிறந்த முறையில் பணியாற்றி வரும் ஒரு பெருமைவாய்ந்த அமைப்பாகும். இது ஒரு நிறைந்த மனிதவளம் உள்ள சங்கம் எனத் தெரிவித்தார்.

சங்கத்தின் தலைவர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பணிமனைக் கட்டடத்தை பிரதம விருந்தினர் எஸ்.சத்தியசீலன் நாடாவெட்டித் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அதிபர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதிச் செயலாளர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(137)



# முல்லைத்தீவு மாவட்டத்திற்கு செய்மதி தொலைத்தொடர்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையதிற்கு செய்மதித் தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், தொலைத்தொடர்பு வசதிகள் அற்றுப்போனாலும் குறுகிய நேரத்தில் மக்களுக்குச் சேவையைச் செய்யக்கூடிய வாய்ப்பு இதன் மூலம் ஏற்பட்டுள்ளது.

எச்சந்தர்ப்பத்திலும் தொலைத தொடர்பு சேவையை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் றீட்.நித்தியானந்தன் குலாஸ் தெரிவித்துள்ளார். (04)

# புதிய அதிபர் நியமனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட வற்றாப்பளை மகா வித்தியாலயத்திற்கு கடந்த 15ஆம் திகதி முதல் புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.'

ஒரு வருட காலத்திற்கும் மேலாக இப்பாடசாலைக்கு அதிபர் ஒருவர் நியமிக்கப்படாதிருந்த நிலையில், வவுனியா மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் நடத்திய நேர்முகத் தேர்வின் அடிப்படையிலும், வடமாகாணக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுக்கு அமைவாகவுமே அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதில் த.ஸ்ரீபுஸ்பநாதன் என்பவரே அதிபராக நியமிக்கப்பட்டுள்ளதுடன், இப்பாடசாலை தரம் ஒன்று முதல் க.பொ.த. (உ/த) வகுப்பு வரை கொண்டுள்ளதோடு, 536 மாணவர்கள் கல்வி பயின்று வருவது குறிப்பிடத்தக்கது. (04)

# வெளிநோயாளர் மருந்தகத்தை ஞாயிறில் திறக்குமாறு கோரிக்கை


(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு மருந்தகம் ஞாயிற்றுக் கிழமைகளில் மூடப்பட்டிருப்பதால் விடுதியில் இருந்துவெளியேறும் நோயாளர்கள் மிகவும் சிரமப்படுவதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் விடுதியில் சிகிச்சை பெற்று வைத்தியசாலையில் இருந்து வெளியேறும் போது வைத்தியர்கள் எழுதிக்கொடுக்கும் மருந்துவில்லைகளைப் பெறுவதற்கு வெளிநோயாளர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனால் வெளிமாவட்டங்களில் இருந்து வரும் நோயாளர்கள் தாம் மருந்து எடுப்பதற்கு வேறொரு நாட்கள் வரவேண்டியிருப்பதாகத் தெரிவிக்கின்றனர். எனவே நோயாளர்களின் சிரமத்தை கருத்திற் கொண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் மருந்தகத்தைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் வெளிநோயாளர் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (எஸ்)

# மாணவர்கள் விளையாட்டில் மட்டுமன்றி கல்வியிலும் சாதனை படைக்க வேண்டும்

## ஈ.பி.டி.பி.யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயன்



(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நிகழ்வுகள் வித்தியாலய அதிபர் ம.ஞானசம்பந்தன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் அவர் உரையாற்றுகையில், மாணவர்கள் விளையாட்டுக்களில் மட்டுமன்றி கல்வியிலும் திறமையானவர்களாக மாறவேண்டும். அவ்வாறு அவர்களைக் கல்வியில் மேம்படுத்துவதற்கு அயராது உழைக்க வேண்டிய பாரிய பொறுப்பு பெற்றோருக்கே உள்ளது. இப்பாடசாலையில் பாண்ட் வாத்தியக் கருவி இல்லாத நிலையுள்ளது. பாடசாலை நிகழ்வுகளுக்கு அவசியமாகவுள்ள இவற்றை எனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து பெற்றுத் தருவேன்.

யுத்த நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து மீள்க்குடியமர்ந்த இப்பிரதேச மக்கள் அபிவிருத்தியில் மேலோங்கிச் செல்வதையிட்டு சந்தோசமடைகின்றேன். அமைச்சரும் மக்களின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில் கல்வி மேம்பாடு, மக்களின் வாழ்வாதாரம், பிரதேச அபிவிருத்தியென யாவற்றையும் நிறைவு செய்து ஒரு வளமான எழுச்சி மிகுந்த சமுகமாகத தமிழினத்தை மாற்றியமைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அடிப்படை வசதியின்றி வாழும் வட்டுவாகல் கிராம மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவின் முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலா பிரிவிலுள்ள வட்டுவாகல் கிராம மக்கள் அடிப்படை வசதிகள் இன்றித் தாம் வாழ்வாதார ரீதியாகப் பெரும் கஷ்டங்களை அனுபவிப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் 199 குடும்பங்கள் மீள்குடியேறி ஒன்றரை வருடங்கள் கழிந்துள்ள நிலையில் இதுவரை தமக்கு எந்த வசதிகளும் பெற்றுக்கொடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

சேதமடைந்த வீடுகளில் 82 வடுகள் திருத்தப்பட்டுள்ள நிலையில் ஏனைய வீடுகள் திருத்தப்படாத நிலையில் வெயிலிலும் மழையிலும் தாம் கஷ்டப்படுவதாகவும் நிரந்த வீட்டுத் திட்ட வசதிகள் எதுவும் எமக்கு வழங்கப்படவில்லை எனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் உள்ள வீதிகளும் கடந்த யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்த நிலையில் புனரமைக்கப்படாது காணப்படுவதாகவும், இவ்வாறு குண்டும் குழியுமாக இருக்கும் வீதியூடாகவே தாம் பயணம் செய்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதைவிட இக்கிராமத்தில் பெரும்பாலும் கணவனை இழந்த பெண்களே குடும்பத் தலைவர்களாக விளங்குவதால் அவர்களுக்கான தொழில்கள் இல்லாத நிலையில் அவர்கள் வாழ்வாதார ரீதியாக நாளாந்தம் சிரமப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இக்கிராமத்தில் மின்சார விநியோகம் குறிப்பிட்ட சில குடும்பங்களுக்கே வழங்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை எனவும் கடற்றொழிலை மேற்கொள்ளும் இக்கிராமத்திலுள்ள மீனவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள், வலைகள் என்பன வழங்கப்படவில்லை எனவும் இதனால் தாம் தொழில் செய்யாமல் இருப்பதாகவும் இக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே வாழ்வாதார ரீதியாகச் சிரமங்களுக்குள்ளாகும் எமக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதற்கான வசதிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# கண் மருத்துவமுகாம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள ஸ்ரீ கணேச சனசமூக நிலையத்தில் நாளை புதன் கிழமை காலை 9.30 மணிக்கு கண் மருத்துவ முகாம் இடம் பெறவுள்ளது.

கொழும்பு கண்ணாடி நிறுவனத்தின் மூலம் கண்ணாடி விற்பனை செய்வதற்காகவே இம்முகாம் இடம்பெறுவதாகவும் கண்ணாடி தேவையானோா 400 ரூபா கட்டி முற்பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும், ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (10)


# திறப்பு விழா

(பருத்தித்துறை)

புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத் திறப்பு விழா எதிர் வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிலையத் தலைவர் க.குகநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சதா ரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (100)





யாழ்.விஞ்ஞான சங்கத்தினால் பாடசாலை மாணவர்களிடையே கடந்த சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட விஞ்ஞானக் கண்காட்சியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் தனது ஆக்கம் தொடர்பாக ஆசிரியருக்கு விளக்கமளிப்பதையும், கண்காட்சியை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பார்வையிடுவதையும் காணலாம்.

# காரைநகர் - யாழ்ப்பாணம் பேருந்துக் கட்டண விபரம்

(யாழ் நிருபர்)

தற்போது நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பேருந்துக்கட்டணங்களும் உயர்த்தப்பட்டுள்ளன.

785 - கல்லுண்டாய், சித்தங்கேணி ஊடாக செல்லும் வழி பேருந்திற்கான கட்டணம் 45 ரூபாவில் இருந்து 55 ரூபாவாகவும், 786 - ஆனைக்கோட்டை, நவாலியூடாகச் செல்லும் வழி பேருந்திற்கான கட்டணம் 41 ரூபாவில் இருந்து 49 ரூபாவாகவும், 782 - சித்தங்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய் ஊடாகச் செல்லும் வழி பேருந்திற்கான கட்டணம் 44 ரூபாவில் இருந்து 55 ரூபாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

# இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட்டது

(கரணவாய்)

கட்டைவேலி நெல்லியடி பல நோ.கூட்டுறவுச் சங்க புதிய இயக்குநர்சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தலைவராக செ. செல்வராசா, உபதலைவராக சோ.கணநாதன், மற்றும் இயக்குநர்களாக சி. செகராஜசிங்கம், க. கந்தசாமி த.நவரட்ணம், பா. சசிகரன், நி. சுகுணகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (18)

# மிலாதுன் நபி விழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பள்ளிவாசல்கள் நம்பிக்கையாளர் சபையும் நீராப்பிட்டி அல்லி ஜின்னா விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் ஹிஜிரி 1433 வருட மிலாதுன் நபி இன்சா அல்லா விழா எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு தண்ணீரூற்று மகா வித்தியாலயத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் மாணவர்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்விற்கு உலமாக்கள் அரச உத்தியோகத்தர்கள், பொது மக்கள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு சபையினர் அறிவித்துள்ளனர். (04)

# வன்னியில் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களின் சேவை மகத்தானது

## ஈ.பி.டி.பி.யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார்



(கிளிநொச்சி)

வன்னியில் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் இன்று ஒரு வரலாற்றுச் சேவையினைச் செய்து வருகின்றார்கள்.

மக்களுக்கு இருக்கும் ஆபத்தை நீக்க மிகவும் கடினமான பணியினை மேற்கொண்டிருக்கும் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களின் இந்த வரலாற்றுச் சேவை என்றும் பாராட்டுதலுக்குரியது என ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலக பிரிவிலுள்ள ஜெயபுரம் கிராமத்தில் கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசத்தை மக்களுக்குக் கையளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிகையில், வன்னியில் அடர்ந்த காடுகளுக்கு மத்தியில் கண்ணிவெடி அகற்றும் பணியினை இன்று பல நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. அந்த வகையில் டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் பணி மகத்தானது கிளிநொச்சியில் இன்று 95 வீத மான மீள்குடியேற்றத்திற்கு கண்ணிவெடி அகற்றும் இந்த உன்னதமான பணியே காரணம்.

தற்போது விவசாயப் பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் அவை நிறைவு பெற்று விவசாய நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பும். அந்த வகையில் இன்று ஜெயபுரம் பிரதேசத்தில் இத்தாவில் பண்ணை அடங்கலாக கே-363பி, கே-438ஏ பிரிவுகளில் 83,277 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மக்களின் நடவடிக்கைக்கு கையளிக்கப்படுகிறது.

அத்தோடு எம்மால் இந்தப் பிரதேச மக்களின் பயனுக்காக 17 இலட்சம் ரூபா பெறுமதியான நீர்ப்பாசன இயந்திரத் தொகுதி ஒன்றும் மக்களிடம் கையளிக்கப்படுகிறது எனத் தெரிவித்தார்.

டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் கிளிநொச்சி மாவட்ட தொழிநுட்ப ஆலோசகர் பொன்சேகா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பூநகரிப் பிரதச செயலர் வசந்தகுமார், டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் செயற்திட்ட முகாமையாளர் அன்றூ ஆச்சர் பேராசிரியர் சில்வா மற்றும் பொலிஸ் அதிகாரி, கிராம அலுவலர், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# பெரும்போக விவசாயிகளின் காணிகளுக்கு காப்புறுதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2011,2012 ஆம் ஆண்டுக்குரிய பெரும்போக நெற்செய்கையில் கூடுதலான விவசாயிகளின் காணிகள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன.

இதன்படி இம்மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் காணிகளில் 1123 விவசாயிகளின் மொத்தக் காணிகளாக 4802.75 ஏக்கர் பரப்புக் காணிகள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன.

இக்காப்புறுதித் திட்டத்தில் விவசாயிகள் காணிகளைக் காப்புறுதி செய்வதன் மூலம் ஏற்படும் நன்மைகள், பயன்கள் மற்றும் அது தொடர்பான விழிப்புணர்வுகள் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அனைத்து வங்கிகள் மற்றும் கமநல சேவைத் திணைக்கள அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ளன.

இதனையடுத்தே விவசாயிகள் காணிகளைக் காப்புறுதி செய்துள்ளதாக கமத்தொழிலாளர் மற்றும் கமக்கார நல காப்புறுதி சபையின் மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (04)

# விழிப்புணர்வு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவால் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் கட்டாயக்கல்வி, சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு நடைபெற்றது. இச் செயலமர்வு கல்லூரி அதிபர் எம்.எஸ். ஏ.எம் முபாறக் தலைமையில் நடைபெற்றபோது பெரும் தொகையான பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.

இந் நிகழ்வில் யாழ்.வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் இராசநாயகம், செயற்திட்ட அலுவலகர் ந. சண்முகராசா, ஆசிரிய ஆலோசகர் எஸ். இரவீந்திரன் ஆகியோர் மாணவர்களின் கல்வி, பாதுகாப்பு, சம்பந்தமான ஆலோசனைகளையும், நடப்பு நிகழ்வுகள் தொடர்பாகவும் விரிவுரையாற்றினார்கள். (105)

# முரசின் இன்றைய பலன்

(21.02.2012 -செவ்வாய்க்கிழமை)

கர வருஷம் மாசி மாதம் 09 ஆம் திகதி. அமாவாசை பின்இரவு 4.32 வரை.
நட்சத்திரம் அவிட்டம் சித்தம்பின்இரவு 12.47 வரை. அமாவாசை விரதம்
இராகுகாலம் 3.31 - 5.01 வரை. சுபநேரம் 11.01 - 12.31 வரை.
எமகண்டம் 9.31 - 11.01 வரை. குளிகைகாலம் 12.31 - 2.01 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | ஆயாசம், நண்பரால் உதவி, கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை, முன்னேற்றம். |
| ரிஷபம் | அரச நன்மை, நினைத்தது நிறைவேறும், மனோதிடம், சிக்கல்கள் அகலும். |
| மிதுனம் | இலாபதினம், உறவினர்கள் உதவி, வாகன சேர்க்கை, பயணச்செலவு. |
| கடகம் | புது முயற்சி தவிர், ஸ்திரிகளால் நன்மை, இறைவழிபாடு, தொழிலில் திருப்தி. |
| சிம்மம் | மனோதிடம், நண்பரால் தொல்லை, நம்பிக்கைத்துரோகம், சொத்துச்சேரும். |
| கன்னி | எதிர்ப்புகள், இரட்டிப்புச் செலவு, கடன்படல், பிரயாண விரயம். |
| துலாம் | புகழ்சேரும், பொறுப்புகள் அதிகரிப்பு, கடன் படநேரிடும், வைத்தியச்செலவு. |
| விருச்சிகம் | வெற்றிகள் குவியும், காரியானுகூலம், நண்பர்களால் உதவி, செல்வாக்கு உயரும். |
| தனுசு | மறைமுகமான எதிர்ப்புகள், தூரதேச தகவல், தன்னிறைவு, பெற்றோர் உதவி. |
| மகரம் | மனோதைரியம், பொருள்சேர்க்கை, தொழிலில் போட்டி, மனதில் உற்சாகம். |
| கும்பம் | செலவுகள், பிள்ளைகளால் இலாபம், அகால போஜனம், சுபகாரியம். |
| மீனம் | கவனம்தேவை, இடமாற்றம், மருத்துவச் செலவு, அவமதிப்பு ஏற்படும். |

# வாழ்வாதார உதவிகளை பெற்றுத்தருமாறு கோரிக்கை

(பருத்தித்துறை)

நாகர்கோவில் மேற்கில் கடற்தொழில் செய்யும் நூற்றுக் கணக்கான குடும்பத்தினர் தாம் எவ் வித உதவிகளும் அற்ற நிலையில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதி மக்கள் அங்கு நடைபெற்ற யுத்த நடவடிக்கையினால் தமது தொழில் வளங்களையும் இழந்து சொத்துக்களையும் இழந்து தற்போது மீள்குடியேறியுள்ளனர்.

இவர்கள் மீள்குடியேறி நீண்ட காலங்களாகியும் தமது அன்றாட அடிப்படைத் தேவைகள் எதனையும் பூர்த்தி செய்ய எந்த அமைப்புக்களும் முன் வராததால் தாம் குடும்பங்களுடன் கஷ்டநிலையில் வாழ்வதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்க முன்வரவேண்டும் என அப்பகுதி கடற்தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (100)

# சேதமடைந்துள்ள வீதி

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி வாரிவட்டன் வீதி தற்போது போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளதால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிநோக்கி வருவதாக மருதங்கேணி கிராமிய அபிவிருத்திக்கழகம் தெரிவித்துள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இவ்வீதி கடந்த வருடம் புனரமைக்கப்பட்டபோதிலும், அது ஒழுங்கான முறையில் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படாததால் மீண்டும் குண்டும் குழியுமாகச் சேதமடைந்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ் வீதி உள்ளூர் பாடசாலைகள் மருதங்கேணி வைத்தியசாலை மற்றும் கிராமங்களுக்குச் செல்லும் முக்கிய இணைப்பு வீதியாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை இவ்வீதிச் சீர்கேட்டினால் பஸ் சேவை இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (100)



கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலக நிர்வாக முகாமைத்துவத் திறன் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற பூநகரிப் பிரதேச செயலகத்திற்கு பொது நிர்வாக அமைச்சால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட நீர்த்தாங்கி மற்றும் உழவியந்திரங்களுடன் உத்தியோகத்தர்கள் நிற்பதைக் காணலாம். (112)

# 13ஆவது திருத்தத்தையும் அதிகாரப் பகிர்வையும் அவமதிக்கும் சுமந்திரன்

பல மில்லியன் கணக்கானோர் பார்த்து ரசிக்கும் சுப்பர் போல் நிகழ்ச்சியில் தனது பாடலொன்றில் நடுவிரலைக் காண்பித்து, மியா (MIA) எனும் இலங்கை வம்சாவளிப் பாடகி சர்ச்சைக்குள்ளானது போல, MAS என லக்பிம நியூஸ் பத்திரிகையினரால் அழைக்கப்பட்ட எம்.ஏ சுமந்திரன், நாமினி விஜேதாசவுக்கு அளித்த பேட்டியில், 13 ஆவது சீர்திருத்தத்தையும், அதிகாரப்



**முன்னர் நிராகரிக்கப்பட்டு தற்போது பேச்சுவார்த்தை மேசைக்கு மீண்டும் அவர்களால் கொண்டுவரப்படும், 1995, 1997 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளின் மங்கள முனசிங்க மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க ஆகியோரின் தீர்வுத்திட்ட முன்மொழிவுகளை, அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவை (அவர்கள் பகிஷ்கரித்தார்கள்) நிராகரித்தமைக்கான காரணங்களைக் கூறுவதோடு, அதுகுறித்த வருத்தத்தையும் TNA தெரிவிக்க வேண்டும்.**

பகிர்வையும் அவமதித்து சர்ச்சைக்குள்ளாகியுள்ளார்.

"...இது ஒரு சரியான திட்டமல்ல. நாங்கள் அதனை நிராகரித்து விட்டோம். 13 ஆவது திருத்தம் 1987 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. அது போதுமானதாக இருந்திருந்தால், நாங்கள் இவ்வளவு இரத்தம் சிந்தியிருக்கத் தேவையில்லை" நாங்கள் குளோபல் தமிழ் போரத்துடன் இணைந்திருக்கிறோம்... இணைந்திருக்க விரும்புகிறார்களா அல்லது பிரிந்திருக்க விரும்புகிறார்களா என்று நீங்கள் தமிழ் மக்களைக் கேட்க வேண்டும்.

எல்லா இடத்திலும் அப்படித்தானிருக்கிறது. தனித்துவமான மக்கள் பிரிவினருக்கென சர்வதேச சட்டத்தில் சுயநிர்ணய உரிமைகள் எனும் சில உரிமைகள் உள்ளன. சுயநிர்ணயத்துக்கான உரிமை உள்ளக ரீதியாகவே முதலில் செயற்படுத்தப்பட வேண்டும் என சர்வதேச சட்டம் சொல்கிறது. ஆனால் அது தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டால், கியூபெக் தொடர்பிலான கனேடிய உச்ச நீதிமன்றத் தீர்ப்பினைப் போல, ஒருதலைப் பட்சமாக பிரிந்து செல்லும் உரிமைக்கு அவர்கள் உரித்துடையவர்களாகலாம்.

ஆகவே, இலங்கை ஒரே நாடாக இருக்க வேண்டுமானால், ஒரே நாடாக இருக்க வேண்டும் என்றே நாங்களும் விரும்புகிறோம், அப்படியானால் அதனைப் பாதுகாக்க, சுயநிர்ணய உரிமையை நீங்கள் வழங்கி, ஒரே நாட்டுக்குள் அதனை அனுபவிக்க வழிவகைகள் செய்யப்பட வேண்டும். அது வழங்கப்பட வேண்டும், அங்கீகரிக்கப்பட வேண்டும். அது, பெரும்பான்மையினரின் விருப்பிற்கேற்ப வழங்கப்படுவதில்லை. அது சர்வதேச சட்டத்திலுள்ள உரிமை தொடர்பான விடயம்..." (லக்பிம நியூஸ் பெப் 5, 2012)

இதைச் சொன்னவர் TNA யின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சுமந்திரன்தான் என்பது தெரியாவிட்டால் சத்தியமாகச் சொல்கின்றேன், யுத்த நிறுத்த ஒப்பந்தம் எனும் துன்பம் மிகுந்த திருப்திப்படுத்தல் காலப்பகுதியான 2002 இல், ஒஸ்லோவிலும் சட்டாஷிப்பிலும் சாமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில், வன்னியில் பிரபாகரனின் பத்திரிகையாளர் மாநாட்டில், அன்ரன் பாலசிங்கம் இதைச் சொன்னதாகவே நான் நினைத்திருப்பேன். இது மிகைப்படுத்தல் இல்லை. இணையத்தில் தேடிப்பார்த்தால் இது திரு. அன்ரன் பாலசிங்கத்தின் வாதம்தான் என்பது ஊர்ஜிதமாகும்.

TNA யின் மதிநுட்பவியலாளர் எல்.ரீ.ரீ.ஈ. யின் மதிநுட்பவியலாளரின் கருத்துக்களையே எதிரொலிக்கும் ஒரு விசித்திரமான காலகட்டத்தில் நாங்கள் இப்போது இடத்தில் இருக்கின்றோம். TNA யும் மற்றவர்களும் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? இந்த முட்டாள்தனத்தை இலங்கை மக்கள் நிராகரித்ததால் தானே போராடி யுத்தத்தில் உறுதியான வெற்றியும் கண்டிருக்கிறார்கள். இதனை சந்தேகக் கண் கொண்டும் அலட்சியத்தோடும் அல்லாமல் வேறு எப்படிப் பார்ப்பார்கள்?

கனேடிய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு எவ்வாறு "சர்வதேச சட்டமா"கும் என்பதையிட்டு சுமந்திரன் எமது அறிவுக் கண்களைத் திறக்க வேண்டும். சர்வதேச சட்டம எந்தளவுக்கு மென்மையானது என்பதை - விவாதத்துக்காகவேனும், இந்த எடுகோள் மென்மையான சர்வதேச சட்டங்களின் எல்லைகளுக்குள்ளாவது நுழைய முடியும என்பதை - தேசிய அரசியலமைப்பு, மற்றும் நாட்டின் இறையாண்மை என்பனவற்றில் முன்னுதாரணங்களைச் செயற்படுத்த முடியும் என்பதை விளக்க வேண்டும்.

அத்தோடு கனடாவோ ஸ்கொட்லாந்தோ எவ்வாறு இதுவிடயத்தில் "எல்லா இடங்களிலும்" ஆகின்றது என்பதனையும் அவர் தயவாக விளக்க வேண்டும்.

இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்ட, தோற்றுப் போன, துண்டாடப்பட்ட நாடொன்றுக்கு அப்பால் (மென்ஜிஸ்டுவின் எத்தியோப்பியா, முன்னாள் யூகோஸ்லாவியா, தென் சூடான்) இனம் காணப்பட்ட புவியியல் பகுதிகளில் செறிந்து வாழும் இனக்குழுக்கள், அந்நாட்டின் எல்லைக்குள் இணைந்திருக்க வேண்டுமா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பொன்றுக்கு உரித்துடையவர்களாக இருக்கிறார்களா? அவ்வாறில்லையெனும்போது, உள்ளக தன்னாட்சி அதிகாரங்கள் இல்லாத போது, பிரிந்து செல்லும் வாய்ப்புக்கான அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளதா?

சுமந்திரன் அதிக உலக நாடுகளுக்கு பயணம் செய்திருந்தாலும், இப்பூமியில் இலங்கை எந்தக் கண்டத்தில் இருக்கிறது என்பது அவருக்குத் தெளிவாகத் தெரிந்திருக்கவில்லை. ஆசியாவில் எந்த நாடும், சமஷ்டி போன்றதான, ஜனநாயக, மதச்சார்பற்ற இந்தியாவாகட்டும், தாராளவாத ஜனநாயகம் நிலவும் பிலிப்பைன்ஸ் ஆகட்டும், கனேடிய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு தமது உள் விவகாரங்களில் சிறிதளவிலான தாக்கத்தையே ஏற்படுத்த முடியுமென்றும், அல்லது, சர்வதேச சட்டத்தின் வழக்காறுகளாகவும் அவர்கள் கருதுகின்றனர்.

காஷ்மீர் அல்லது மின்டானோ பற்றியெல்லாம் திரு. சுமந்திரன் அறிந்திருக்கவில்லையாவென ஒருவர் ஆச்சரியப்பட்டார்

தமிழர்களின் போராட்டம் இலங்கை அரசால் நசுக்



கப்படுவதற்கு முன்பதாக, இந்திய அரசால் தமிழ் மக்களுக்குப் பெற்றுத்தர முடிந்த மிகச் சிறந்த தீர்வாக அமைந்த 13ஆவது திருத்தச் சட்டத்தை அவர் குறை கூறுகின்றார்.

13 ஆவது திருத்தம் போதுமானதான இருந்திருந்தால் நாங்கள் இவ்வளவு ரத்தம் சிந்தியிருக்கத் தேவையில்லை என்று சுமந்திரன் கூறுகிறார். 13 ஆவது திருத்தத்தின் போதாமைதான் இத்தனை ரத்தம் சிந்துகைக்கும் காரணமாக இருந்ததென்றால், அது அமுல் செய்யப்படாமல், திருத்தத்தில் எந்தவொரு முன்னேற்றமும் காணப்படாமல் 2009 மே மாதத்துடன் இரத்தம் சிந்தப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது எவ்வாறு?

அதனால் முன்னைய நிராகரிக்கப்பட்டு தற்போது பேச்சுவார்த்தை மேசைக்கு மீண்டும் அவர்களால் கொண்டுவரப்படும், 1995, 1997 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளின் மங்கள முனசிங்க மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க ஆகியோரின் தீர்வுத்திட்ட முன்மொழிவுகளை, அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவை (அவர்கள் பகிஷ்கரித்தார்கள்) நிராகரித்தமைக்கான காரணங்களைக் கூறுவதோடு, அதுகுறித்த வருத்தத்தையும் TNA தெரிவிக்க வேண்டும்.

ஒவ்வொரு தடவை தீர்வுதிட்டங்கள் முன்மொழியப்படும்போதும், அதனை நிராகரித்துவிட்டு, தமது செய்கையை நியாயப்படுத்தி வெருட்ட முடியாது.

தர்க்க ரீதியாக கடைசியில் ஏற்றுக்கொள்ளக் கூடியது, இலங்கைக்குள் வாழவிரும்புகிறீர்களா என தமிழ் மக்களிடம் மட்டுமே வாக்கெடுப்பு நடத்துவது, அவரது அனுமானத்துக்கு மாறாக ஒரு நாட்டின் எல்லைக்குள் வாழ விரும்புகிறார்களா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் வாக்கெடுப்பு மூலம், உள்ளக சுய நிர்ணய உரிமை தீர்மானிக்கப்படுவதில்லை.

"நாங்கள் இணைந்து வாழ விரும்பவில்லை" என்பதே மக்களின் தீர்ப்பாக இருப்பின், இதில் "உள்ள" எங்கிருக்கிறது?

30 வருடகாலம் யுத்தம் நிகழ்ந்த, நாட்டின் முக்கிய பகுதியொன்றில், 13 ஆவது திருத்தத்தின் அரசியலமைப்பு அடிப்படையை நிராகரிக்கும், சுயநிர்ணய உரிமைக்காக வாக்கெடுப்பை வேண்டிநிற்கும் கட்சியொன்றுடனான அதிர்காரப்பகிர் வுக்கான ஒரு ஆபத்தான முடிவை எந்தவொரு நிர்வாகமும் எப்படி எடுக்கும்?

இது TNAயின் தந்திரமா அல்லது TNA + குளோபல் தமிழ் போரம் என்பனவற்றின் கூட்டுத் தந்திரமா?

புலிகள் பயங்கரவாதத்தால் சாதிக்க நினைத்ததை மாற்று வழியால் சாதிப்பதல்லவா இது?

**- தயான் ஜயதிலக்க கட்டுரையிலிருந்து.**

## மருதநாயகத்தில் ரஜினி – கமல் இணைவு



"விஸ்வரூபம்" படத்தைத் தொடர்ந்து அடுத்ததாக கமல் இயக்க இருக்கும் பிரம்மாண்டமான படம் "மருதநாயகம்". மருதநாயகம் படத்தின் ஆரம்பகட்டப் பணிகள் 1997 இல் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், அதற்கான தயாரிப்பு செலவுக்கு பணப் பற்றாக்குறையால் படம் அப்போதைக்கு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது. இப்போது கமல் அப்படத்திற்கான பணிகளில் ஈடுபடத் தயாராக உள்ளார். படத்தின் இப்போதைய பட்ஜெட் 150 கோடியைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. "மருதநாயகம்" படத்தை தமிழ், தெலுங்கு, ஹிந்தி மற்றும் ஆங்கிலத்தில் வெளியிட திட்டமிட்டுள்ளார். "மருதநாயகம்" படத்தில் ரஜினிகாந்திற்கு ஏற்ற பாத்திரம் ஒன்று இருக்கிறதாம். "பல வருடங்களுக்கு முன் நானும், ரஜினியும் இணைந்து நடித்தோம். அதன் பின்னர் நாங்கள் இருவரும் இணைந்து நடிப்பதற்கேற்ற கதையோடு யாரும் எங்களை அணுகவில்லை. இப்போது நானே அதைச் செய்துவிட்டேன்" எனக் கமல் தெரிவித்துள்ளார். ரஜினியும், கமலும் இணையும் இப்படத்தை திரையில் விரைவில் காண ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.

## மோட்டார் சைக்கிளிலிருந்து...



கோயம்புத்தூருக்கு அருகில் கலங்கல் என்று ஒரு கிராமம். அங்கே வீட்டுக்கு அடங்காத பிள்ளை துரைசாமி. அந்த ஊருக்கு முதன் முதலாக ஒரு மோட்டார் சைக்கிள் வந்தது. மற்றவர்களெல்லாம், அந்த வண்டியில் வந்த வெள்ளைக்காரரைத் தான் பார்த்தனர்.

அவர் ஒரு நில அளவையாளர்... சிறுவன் துரைசாமிக்கோ, அந்த மோட்டார் சைக்கிளின் மேல் கவனம். அது எப்படி ஓடுகிறது என்று ஆச்சரியம். எப்படியாவது அந்த மோட்டார் சைக்கிளை ஓட்டிப் பார்த்துவிட வேண்டும் என்று கொள்ளை ஆசை.

ஒரு கிராமத்துப் பள்ளிக்கூடச் சிறுவன், வெள்ளைக்கார அதிகாரியிடம் போய், எப்படி தன் ஆசையை வெளியிடுவான்?

மனதுக்குள்ளேயே நினைத்துப் புழுங்கிக் கொண்டிருந்தான். கடைசியில் ஊரை விட்டே புறப்பட்டு விட்டான்....


நேரே கோயம்புத்தூருக்குச் சென்றான். அங்கு தான் அந்த வெள்ளைக்கார நில அளவையாளர் இருந்தார். அவர் எங்கிருக்கிறார் என்பதுதான் சிறுவனுக்குத் தெரியவில்லை. கையில் காசில்லை. வயிற்றுப் பாட்டுக்கு வழி? கடைசியில் ஒரு ஹோட்டலில் டேபிள் கிளீனராக சேர்ந்து கொண்டான்...

மூன்று வருடங்கள் அதே இடத்தில் வேலை செய்தான். அந்தக் காலத்துக்குள் அவன் சேர்த்து வைத்த மூலதனம், 400 ரூபாய். நில அளவையாளரின் முகவரி தெரிய வந்தது. பணத்தைக் கொண்டு போய், அவர் காலடியில் வைத்தான். இளைஞனின் விடாமுயற்சியைப் பாராட்டி, அந்தத் துரை, அவனுக்கு மோட்டார் சைக்கிளைக் கொடுத்து விட்டார்.

உலகத்தையே விலைக்கு வாங்கிவிட்ட பெருமையோடு, மோட்டார் சைக்கிளுடன் துரைசாமி வெளியேறினான். நம்மைப் போன்றவர்கள் என்றால் அத்துடன் திருப்தி அடைந்து விடுவர் ஆனால், துரைசாமி திருப்தி அடையவில்லை...

மோட்டார் சைக்கிளை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரிப்பதும், பூட்டுவதுமாக இருந்தான். அதன் நுணுக்கங்களையெல்லாம் தெரிந்து கொண்டான். மெக்கானிக்காக ஆகி விட்டான். பிற்காலத்தில் ஆயிரக்கணக்கான இன்ஜினியர்களைத் தயார் செய்யும் தொழிலதிபராகவும், பல கண்டுபிடிப்புகளுக்குச் சொந்தக்காரராகவும் ஆனான். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதுமே பிரபலமான ஜி.டி.நாயுடு தான் அந்த துரைசாமி...

# தமிழ் மக்களுக்கு...



இரு தசாப்தங்கள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக முன்னின்றவன் என்ற வகையில் அதற்காகப் பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றவன் என்ற வகையில் இந்த மடலினை உங்களுக்கு எழுதுகிறேன். 8 தசாப்தங்களாக தீர்க்கப்படாமல் இருக்கும் உங்களது அரசியல் உரிமைகள் மற்றும் அரசியல் சமஉரிமை தொடர்பான பிரச்சினை பற்றிய எனது தற்போதைய நிலைப்பாட்டினை தெளிவுபடுதத்தவே நான் இந்த மடலில் முனைகிறேன்.

உங்களது அரசியல் பிரச்சினை மீண்டும் சக்கரம் போன்று சுழன்று மிக மோசமான நிலைமையை எய்தப்போகிறது. அதற்கான சமிக்ஞைகளும் தென்படுகின்றன.

இவ்வாறான ஓர் அபாய எச்சரிக்கை 70களின் முதல் பாகத்தில் புதிய குடியரசு அரசியல் அமைப்பினை வரைவதற்காகக் கூடிய அரசியல் அமைப்புச் சபையினை அறிமுகப்படுத்தும் விவாதத்தில் முன்வைக்கப்பட்டது. இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சமஷ்டிக் கட்சியின் உடுவில் தொகுதியினைப் பிரதிநிதித்துவம் செய்த வி. தர்மலிங்கம், தமிழ் சமுகத்தில் அரசியல் அடிப்படைவாதம் தோற்றம் பெறுவதாகவும் அதனைத் தோற்கடிக்க தெற்கில் இருந்து தீர்மான அரசியல் தீர்வு ஒன்றினை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிங்கள சமுதாயத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இன்று நாம் அதேபோன்று சிங்கள சமூகத்தில் அடிப்படைவாதத்தினை தீவிரப்படுத்த இடமளிக்க வேண்டாம் என்று தமிழ் சமூகத்திடம் கோரிக்கை விடுக்க விரும்புகிறேன்.

அன்று புதிய அரசியல் அமைப்பினை அறிமுகம் செய்ததில் முன்னோடியாக செயற்பட்ட இடதுசாரி இயக்கத்தின் பிரபல புள்ளியான கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா உட்பட தென்னிலங்கை அரசியல் தலைமைகள், வி.தர்மலிங்கத்தின் எச்சரிக்கையினை பொருட்டாகக் கொள்ளவில்லை. வடக்கில் தோற்றம் பெற்ற அரசியல் அடிப்படை வாதம் தெற்கில் மட்டுமன்றி வடக்கினையும் துவம்சம் செய்தது.

பேரழிவின் பின்பு மீண்டும் இன்று 70களில் நிலவிய அரசியலைப் பார்த்து நிகழ்கால அரசியலை ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அன்று தோற்றம் பெற்றிருந்த தமிழ் தேசிய வாதத்தினதும் சிங்கள தேசிய வாதத்தினதும் மோதலையும் போட்டியையும் 70களின் அரசியலில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியதாக உள்ளது. இந்தப் போட்டி நிலையும், மோதல் மனப்பாங்கும் மீண்டும் தற்போது தலைதூக்க ஆரம்பித்துள்ளது.

இந்த மோதல் கிரேக்க புனைகதையான பென்டோராவின் பெட்டியினைத திறப்பதனை ஒத்ததாகும். இந்தப் போட்டியும் மோதலும் கடந்த பல தசாப்தங்களாக மீண்டும் பின்னோக்கிச செல்ல முடியாதளவு அழிவினைத் தரும் கற்பனைகளையும், போலிகளையும், அரைகுறை உண்மைகளையும் உருவாக்கியிருக்கின்றது.

இந்தப் புனைவுகளில் இருந்தே நாம் நடைமுறைச் சாத்தியமானது என்று நம்பிக்கை கொண்ட அரசியல் நடவடிக்கைகளைத் தெரிவு செய்ய தூண்டப்பட்டோம். இந்தப் புனைவுகளில் ஒன்றாக "தனி அரசு" என்ற விடயத்தினைக் கூறலாம். இதற்கு எதிராக சிங்கள தேசியத்தினால் உருவாக்கப்பட்ட ஒற்றையாட்சி அரசு என்ற விடயமும் கற்பனையே எனலாம்.

இன்றைய உலகில் ஒற்றையாட்சி அரசு ஒன்று இருக்கும் எனில் அது வியப்பான விடயமாகும். அதேபோன்று 70களின் இறுதியில் தோன்றிய தாயகம் என்ற கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட திம்புப் பிரகடனமும் பொய்யானதே. சிங்கள, தமிழ் தேசியத்திற்கு இடையிலான போட்டியின் விளைவாகவே இந்த இரண்டு கோட்பாடுகளும் உருவாகின.

இன்று நாம் தமிழரின் அரசியல் உரிமைகள் பற்றிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மீண்டும் புனைவுகளையும், பொய்களையும் அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றோமாயின் எஞ்சி நிற்கப்போவது சிங்கள, தமிழ் தேசியம் தொடர்பான அரசியற் போட்டியாகும். இது ஒருபோதும் தமிழ் தேசியத்து அரசியலுக்கு நன்மை தரும் வகையில் நிறைவடையாது...

தமிழ் மக்களின் உரிமைகள் பற்றிப் பேசும் போது, சிங்கள தேசியத்தை மறந்துவிட்டு தெற்கில் தமிழ் அரசியல் பற்றிப் பேசுவதைப் போன்று, உரிமைகளைக் கோரும் வடக்கு அரசியலும் செயற்பட்டுள்ளது. இதன் இறுதி விளைவாக தெற்கு வடக்கினை எதிரியாகக் கருதும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமை தொடர்பான பிரச்சினையினை எதிரி மனோபாவத்தில் மோதலுடன் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் கருதவில்லை. சிங்களவர்கள் இது தமது சகோதர இனத்தவரின் பிரச்சினை என்றே கருத வேண்டும். இந்த சிந்தனையினை மனித உணர்வு நிலைகளுடன் கட்டியெழுப்பிக் கொள்ள வேண்டும்.


இவ்வாறு நான் கூறுவதனால் என்னை விமர்சிக்கக்கூடும். சிங்கள அரசியல் உங்களை கவனிப்பாரற்று விட்டுள்ளது. ஏமாற்றியுள்ளது. எதிர்காலம் பற்றிய நம்பிக்கை இல்லாத ஓர் இனமாக மாறியிருக்கின்றது என்பது குறித்து எனக்கு எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை.

இந்த அனுபவத்தைக் கொண்டே சிங்கள சமூகத்துடன் நெருக்கமான நட்புறவு நிலையினை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். சிங்களவரிடம பறித்துக்கொள்ள எதுவும் இல்லை என்பதை அவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். கௌரவமான ஓர் இனமாக தத்தம் பகுதிகளினை அபிவிருத்தி செய்வதில் உள்ள சம பங்கு உரிமை நிலையினையே நீங்கள் கோருகின்றீர்கள்.

இந்தப் பயணம் சவால் மிக்கதுதான். ஆனால் இந்த பயணத்தினை நாம் மேற்கொள்ளத்தான் வேண்டும். அதற்கு அப்பால் ஓர் பயணம் என்பதே இல்லை என்பதே எனது கருத்தாகும்.

**- ஷிரால் லக்திலக்க**

## றொக்கெற் வாழ்க்கை



றொக்கெற் தேவையற்ற எடையை நீக்கியபடிதான் மேலே செல்லுகிறது.
தேவையற்ற சுமைகளைக் குறைக்கும்போது பயணம் இனிமையாகிறது.
தேவையற்றவைகளைத் தவிர்க்கும்பொழுது வாழ்க்கை இனிமையாகிறது.
தேவையற்ற உணவை மறுத்துவிடுங்கள்.
தேவையற்ற கடனை நிராகரியுங்கள்.
தேவையற்ற விடுமுறைகளைத் தவிருங்கள்.
தேவையற்ற வாக்குறுதி- கையொப்பத்தை மறுத்துவிடுங்கள்.
தேவையற்றவற்றுக்கு வேண்டாம் எனச் சொல்லப் பழகுவோம்.
அது குறிக்கோளை அடைய உதவும்.

# பிள்ளை வளர்ப்பு: ஒரு குடும்ப வன்முறை!

ஒரு ஈடுக்கு எத்தனைக் குஞ்சு பொரிக்கும், அதற்கு என்ன தீவனத்தைப் போடலாம் என்ற முதலாளியின் கணக்கைப்போல போட்டி மயமான இந்த உலகில் தமது பிள்ளைகள் செல்லுபடியாக வேண்டுமென்றால் கம்யூட்டர், விளையாட்டு, கராட்டி, வாய்ப்பாட்டு, இசை வாத்தியம் என்று எல்லாத் துறைகளிலும் முதலாம் இடத்தில் இருந்தால்தான் ஒரு வசதியான வாழ்க்கையை வாழ முடியும் என்பது உயர், நடுத்தர வர்க்கத்தின் கருத்து.

இப்படி குழந்தைகளுக்கு வகை வகையான தீவனம் போட வசதி இல்லாவிட்டாலும் அவரவர் நிலைமைக்கு ஏற்றவாறு பிள்ளைகளை அடைகாக்க முயற்சிக்கும் பண்பாடு கோழி செல்லைப் போல பெற்றோர்களின் மனதில் அரித்துக் கொண்டிருக்கிறது.


கோழி வியாபாரிக்காவது ஒரு ஈடு பொய்த்து விட்டாலும் அடுத்த ஈடு வரைக்கும் காத்திருக்கும் பொறுமையும் நிதானமும் இருக்கிறது. இப்படி குறி வைத்து வளர்க்கும் பெற்றோர்களுக்கோ தன்னுடைய குஞ்சுகள் ஒரே ஈடில் கோழிகளாக சிறகடிக்க வேண்டும் என்ற அவசரமும் அதற்கு ஈடுகொடுக்க முடியவில்லை என்றால் பிள்ளைகள் மேல் ஆத்திரமும் வருகிறது.

ஆனால் குழந்தைகள் உலகமோ இதற்கு நேர்மாறானது. இந்த உலகத்தை உற்றுப் பார்த்தால் நமக்கு என்ன கிடைக்கும் என்ற தேவையிலிருந்து அவர்கள் பார்வை தொடங்கவில்லை. இந்த உலகில் என்ன இருக்கிறது என்ற தேடலிலிருந்து அவர்கள் பார்க்கத் தொடங்குகின்றார்கள்.

முடிவில்லாத மலைத் தொடர்கள், ஓய்வில்லாத அலைகளின் ஓட்டம், இவைகளின் பின்னணியை ஆராயத் தொடங்குகிறது அவர்கள் மனம். மேகத்திற்குள் மறைந்த நிலவு வெளிவருவதைப் பார்த்து, அம்மாவின் சோற்றையும் தட்டிவிட்டுவிட்டு நிலவை ஆராய்கிறது பிள்ளைமனம்.

இப்படி இயற்கையை மட்டுமல்ல மனிதர்களால் தயாரிக்கப்பட்ட பொருட்கள், அவற்றின் இயக்கம். சிலர் கையில் அவைகள் இருப்பதும், பலரிடம் இல்லாததும், கட்டடங்கள் பக்கத்திலேயே குடிசைகள் இருப்பதும் ஏன், ஏன் என்ற கேள்விகள் பிள்ளைப்பருவத்தின் ஆர்வத்தை அள்ளி வருகின்றன.

தனித்தனியாக காணக் கிடக்கும் இந்தக் காட்சிகள் குறித்த புரிதலை ஒருங்கிணைந்த முறையில் பெறுவது தான் குழந்தைகளின் முதல் தேவை. ஆனால் அனைத்தையும் அழித்து தான்மட்டும் வாழத்துடிக்கும் முதலாளித்துவ சமூகமோ பல சிறு தொழில்களை அழித்தால்தான் பெரிய பன்னாட்டுக் கம்பெனி வாழ முடியும் என்ற தனது பொருளாதார கொள்கையையே, குடும்பத்தின் இலக்கணமாகக் கொண்டுவந்து "உன்னைப்பார் உலகைப் பார்க்காதே" "போட்டி போட்டு முன்னேறு! சகமனிதர்கள் மீதான போட்டியில் வெற்றி பெறு. அதுவே உனது வாழ்க்கை இலட்சியம், கனவு" என குட்டி இளவரசர்களுக்கு முடிசூட்டி விடுகிறது.



உயிர்களின் தோற்றத்தையும், பரிணாமத்தையும் இடையறாது ஆராய்ந்து உழைப்பைச் செலுத்தி அறிந்த டார்வின் பரிணாமக் கொள்கை, தனிமனித முன்னேற்றத்திற்கான ஆராய்ச்சி அல்ல.

ஆனால் சுயநலமனம் கொண்ட குடும்பங்களோ குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்று கண்டுபிடித்து விட்டால் குடும்பம் நடத்த முடியுமா? எங்களுக்கு டார்வினைப் போல ஆராய்ச்சி மனம் படைத்த ஒரு மனிதன் தேவையில்லை. கோடீஸ்வரன் பதவிக்கு கட்டங்கட்டமாகத் தாவி வெற்றி பெறும் ஒரு குரங்கு போதும் என்கின்றனர். அதாவது சமுதாயத்தை முதலிடத்தில் வைக்கும் அறிவு தேவையில்லை. இந்த சமுதாயத்தில் நான் முதலிடத்தில் வரும் வழியைச் சொல் என்கிறது நடுத்தர வர்க்கம்.

குழந்தைகளின் ஆர்வத்தைத் தட்டி எழுப்புவது, அவர்கள் மனம் விரும்பிய விளையாட்டைப் பழக அனுமதிப்பது, முக்கியமாக சமுதாய உறுப்பினர்களான சக மனிதர்களுடன் கூடி இயங்க விடுவது என்ற கருத்தெல்லாம் இல்லாமல், 2500 மைல்களுக்கு அப்பால் குறி வைத்து ஏவக்கூடிய ஒரு ஏவுகணையைப் போல பெற்றோர்கள் அந்தஸ்தான வாழ்க்கை தரக் கூடிய ஒரு கனவுப் பிரதேசத்துக்கு பிள்ளைகளை ஏவிக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் நடக்கிறது.

இதனால்தான் பிள்ளைகள் கல்வி, பொழுது போக்கு, விளையாட்டு ஆகியவற்றை முன்னேறும் நோக்கில் பயன்படுத்தும்போது "இதை விட்டுட்டு உருப்படுற வழியைப் பார்!" என்று அலறித் துடிக்கிறார்கள்.

இது குழந்தைகளிடமிருந்து குழந்தைத்தனத்தைப் பறித்தெடுக்கும் பலாத்கார நடவடிக்கையாக மேலோட்டமாகப் பார்த்தால் தெரியும். கொஞ்சம் உள்ளே நுழைந்து பார்த்தால் குழந்தைகளாய் இருக்கும் மனிதர்களிடம் முதலாளித்துவத்திற்கு தேவையான வளர்ப்பும், சுரண்டலும் ஆரம்பமாகி விட்டது என்ற அபாயம் புரியும்.

சிறுவனின் உள்ளத்திலிருந்து அவனுக்கு விருப்பமான படைப்புணர்ச்சியை பிள்ளைப் பருவத்திலேயே துடைத்தெறிந்து விடுகிறது இந்தச் சமுதாயம். இன்னொருபுறம் மேட்டுக்குடி, நடுத்தர வர்க்க குழந்தைகளிடம் இந்தா பிடி சொப்ட்வேர், மேல்படிப்புக்கு ஜாவா, ஈகொம், இப்பொழுதே நல்ல எதிர்காலத்துக்கான திறமையை வளர்த்துக் கொள் என்று அவர்களுடைய பிள்ளைப் பருவத்தையும் தங்கள் சுரண்டலுக்கான அச்சாரமாக மாற்றிக் கொள்கிறது.

இது கேட்பதற்கு மிகையாகத் தோன்றலாம். குடும்பங்களின் நடைமுறையைக் கவனித்தால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை ஒரு நல்ல "பொசிசனுக்கு"க் கொண்டுவர அவர்களை வளரும் சரக்காக வளர்த்தெடுக்கும் முறைகளைக் கவனித்தால் இந்த உண்மை புரியும்.

பிள்ளைகளிடம் குழந்தைத்தனம் பறிக்கப்படுகிறது. கல்விச் சுமை ஏற்றப்படுகிறது, குழந்தை உழைப்பு தடுக்கப்பட வேண்டும் என்று கண்டிக்கும் அறிவாளிகள் கூட இவற்றுக்குக் காரணமான சுரண்டல் சமூக அமைப்பைத் தூக்கியெறிந்தாலொழிய இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்ற உண்மையை ஊருக்குச் சொல்வதில்லை.

**- வினவு.**

# அமெரிக்காவிற்கு எதிராகப் போராட மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும்

## அழைப்பு விடுக்கிறார் அமைச்சர் சம்பிக்க

(கொழும்பு)

இராணுவத்திற்கு தண்டனை வழங்க எந்தவொரு சர்வதேச சக்தியாலும் இயலாது. நாட்டிற்கு எதிரான தீர்மானங்களுக்குத் தலைமை தாங்கும் அமெரிக்காவிற்கு எதிராக அனைத்து இன மக்களும் இணைந்து போராட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மாலைதீவின் சூழலை இலங்கையிலும் நடத்தி விடலாம் என்று நினைப்பது மேற்குலக நாடுகளின் பகற்கனவாகும். வலய நாடுகள் எதிர்கொள்கின்ற ஆபத்துகளுக்கு ஆசிய நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளதாவது,

அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராகச் செயற்படுவது இது முதற்தடவையல்ல. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கை இராணுவத்தை சர்வதேச விசாரணைகளுக்குள் உட்படுத்த இடமளிக்கப் போவதில்லை.



ஆசிய வலயத்தின் மீது குறிவைத்து மேற்குலக நாடுகள் காய் நகர்த்தி வருகின்றன. ஆசிய வலய நாடுகளின் பொருளாதாரத்தைச் சீரழிப்பதே அவர்களின் நோக்கமாகும்.

நாட்டைப் பாதுகாப்பது அனைத்து மக்களினதும் பொறுப்பாகும். அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களை விட அமெரிக்கத் தூதரகம் முன்பதாகவே கூடுதலான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அரசையும், இராணுவத்தையும் பாதுகாக்க வேண்டியது இந்நாட்டு அனைத்து இன மக்களினதும் கடமையாகும். இதற்காக ஓரணியில் திரள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# பல்வேறு நிகழ்வுகள் உள்ளதால் அமெரிக்கா செல்லமாட்டார் பீரிஸ்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அடுத்தமாதம் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்ளமாட்டாரென வெளிவிவகார அமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கு கடந்தமாத இறுதியில் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரன் எழுதிய கடிதம் ஒன்றில், மார்ச் மாதம் வொஷிங்டனுக்கு வந்து பொறுப்புக்கூறுதல், நல்லிணக்கம் மற்றும் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் குறித்த இலங்கையின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விளக்கமளிக்குமாறு கேட்டிருந்தார்.

ஆனால் ஹிலாரியின் அழைப்பையேற்று அடுத்தமாதம் அவர் அமெரிக்கா செல்லமாட்டார் என்று தெரிகிறது.

அடுத்த மாதம் அவருக்கு பல்வேறு நிகழ்ச்சிகள் இருப்பதே இதற்கான அதிகாரபூர்வ காரணம் என்றும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

இருந்தபோதிலும், ஏப்ரல் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் முடிவடைந்த பின்னர் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்வது குறித்து பீரிஸ் ஆலோசிக்கலாம் என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, அமெரிக்கப் பயணத்தின் முடிவில் உறுதிமொழிகள், கடமைகள் குறித்த சுட்டறிக்கை ஒன்றை வெளியிட வேண்டிய நிலை ஏற்படலாம் என்று அஞ்சியே பீரிஸ் அமெரிக்கா செல்லத் தயங்குவதாக வெளிவிவகார அமைச்சில் உலாவும் கதைகளையும் அவர் நிராகரித்துள்ளார்.

இன்னொரு புறத்தில், இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப் படவுள்ள தீர்மானம் குறித்து அமெரிக்காவுடன் பேசுவதற்கு கிடைத்துள்ள வாய்ப்பை பீரிஸ் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளதாகவும் கொழும்பு வாரஇதழ் தெரிவித்துள்ளது.

# இந்தியாவில் கைதான மீனவர்கள் விடுதலை

(கொழும்பு)

இந்தியாவில் கைது செய்யப்பட்டிருந்த அனைத்து இலங்கை மீனவரும் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுள்ளதாக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கும் மற்றும் இந்திய அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் பின்னர் அனைத்து மீனவர்களும் விடுவிக்கப்பட்டுள்ளதாக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத்காரிய வசம் தெரிவித்துள்ளார்.

விடுதலை செய்யப்பட்டுள்ள இறுதி 25 மீனவர்களும் இன்னும் சில தினங்களில் நாடு திரும்புவார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் இந்தியாவின் பல பகுதிகளிலும் கைது செய்யப்பட்ட 125 மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் கட்டம் கட்டமாக அவர்கள் விடுவிக்கப்பட்டதாகவும் பிரசாத் காரியவசம் மேலும் சுட்டிக் காட்டினார்.

# எரிபொருள் நிவாரணம் வேண்டாம் நீர்கொழும்பு மீனவர்கள் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கம் அறிவித்துள்ள எரிபொருள் நிவாரணம் தமக்கு வேண்டாம் என மீனவச் சங்கங்களின் பிரதிநிதிகள் அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் விலை அதிகரிப்புக்கு முன்னர் விற்பனை செய்த பழைய விலைக்கே எரிபொருள விற்பனை செய்யப்பட வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு, தம்மிட்ட கார்தினல் குரே நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கூட்டத்தின் போதே மீனவச் சங்கங்களின் பிரதிநிதிகள் அரசாங்கத்திடம் இதனை வற்புறுத்திக் கூறியுள்ளனர்.

பிரதி அமைச்சர் சரத் குணரட்ன மற்றும் மேல்மாகாண அமைச்சர் நிமல் லான்ஸா ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கொழும்பு, முகத்துவாரம் முதல் புத்தளம் வரையுள்ள மீனவ சங்கங்களின் 100 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

நாளையதினம் இந்த மீனவச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து தமது முடிவைத் தெரிவிப்பதற்கு இதன்போது தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது சாதகமான பதில் கிடைக்காவிட்டால், அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளப்படும் என கடற்கரை தெரு ஐக்கிய மீனவச் சங்கத்தின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பதற்காக நாளை வரை கடலுக்குச் செல்வதில்லை எனவும் மீனவர்கள் தீர்மானித்துள்ளனர்.

# கூடுதல் விலையில் பொருள் விற்பனை; வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை

(கொழும்பு)


அத்தியாவசியப் பொருட்களை நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கு ஏற்ப விற்பனை செய்யாது மேலதிக விலைக்கு விற்பனை செய்வது தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

எரிபொருட்களின் விலை அதிகரித்துள்ள நிலையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கூட்டி விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்சிறிசேன தெரிவித்துள்ளார்.



எவ்வாறாயினும் பொருட்களை உரிய விலையில் விற்பனை செய்யாது அதிகப்படியான விலைகளில் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக தாம் கடுமையான நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார். இது தொடர்பில் தேடுதல் நடவடிக்கைகளை அடுத்தவாரம் முதல் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மிகச் சிறந்த தீர்வுத்திட்டத்தை ஜனாதிபதி மகிந்த முன்வைப்பார்



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிகச் சிறந்த தீர்வுத் திட்டத்தை முன்வைப்பார் என கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையான் தெரிவித்துள்ளார். கண்டியில் நடைபெற்ற முதலமைச்சர் மாநாட்டில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். மாகாண சபைகளை நிர்வாகம் செய்யத் தேவையான சகல அதிகாரங்களும் 13ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். 13ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள அதிகாரங்கள் அமுல்படுத்தப்பட வேண்டியது முக்கியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உள்ளிட்ட தேவையான அதிகாரங்கள் ஏற்கனவே 13 ஆம் திருத்தச் சட்டத்தில் காணப்படுகின்றன எனவும், புதிதாக அதிகாரங்களைக் கோர வேண்டிய அவசியம் கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இராணுவ வாகனம் தடம்புரண்டு கிளிநொச்சியில் 5 படையினர் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இருந்து பரந்தன் நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ ட்ரக் வாகனம் ஒன்று தடம்புரண்டதில் 5 இராணுவத்தினர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் ஏ-9 பிரதான வீதியில் கரடிப்போக்குச் சந்தியில் இடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து பரந்தன் நோக்கி இராணுவ வீரர்களுடன் சென்ற ட்ரக் ரக வாகனம் ஒன்று பாதை வேலை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் கரடிப்போக்குச் சந்தியில் இன்னொரு வாகனத்திற்கு விலத்திக்கொடுக்க முயன்ற போது தடம்புரண்டது.

இதன்போது இதில் பிரயாணம் செய்த 5 இராணுவ வீரர்கள் படுகாயமடைந்தனர். இவர்கள் உடனடியாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் கிளிநொச்சி 57 ஆவது படையணியினைச் சேர்ந்த இராணுவ வீரர்களே இவ்வாறு காயமடைந்தவர்களாவார்கள். இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



கடவத்தையில் 152 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மாவட்ட நீதிமன்ற நீதவான் கட்டடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

மஜிஸ்திரேட் நீதிபதிக்கான வீட்டு வசதியுட்பட சகல வசதிகளையும் கொண்டதாக இந்த மூன்று மாடிக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத் திறப்பு விழாவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பிரதியமைச்சர் அழகிய வண்ண, நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த எதிர்க்கட்சிகள் பகீரத முயற்சி

## மத்திய வங்கி ஆளுநர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

எரிபொருள் விலையேற்றம், பேருந்து மற்றும் மின்கட்டண உயர்வு என்பவற்றைக் காரணம் காட்டி எதிர்க்கட்சியினர் பொது மக்களை வீதிக்கு இறக்கி குழப்பம் விளைவிப்பதை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை மறுசீரமைப்புக் காரணமாக மக்கள் பாதிக்கப்படுவதைக் குறைக்கும் பொருட்டு எரிபொருள் மானிய முறை நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும கூறுகையில், நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்தும் ஸ்திரமாகவே வளர்ச்சி அடைகின்றது. இதனை எவரும் மறுக்க முடியாது.

இன்று நாட்டில் கடன் அட்டைகளுக்கான வட்டி வீதம், லீஸிங் வட்டி வீதம் என்பன பெரிதும் குறைவடைந்துள்ளன. அதே நேரம் கடந்த வருடம் கல்வித் துறைக்காக 131 பில்லியன் ரூபாவும், சுகாதாரத்துறைக்காக 103 பில்லியன் ரூபாவும், வீதி அபிவிருத்திக்காக 128 பில்லியன் ரூபாவும், உரமானியத்திற்காக 133 பில்லியன் ரூபாவும், சமுர்த்தி நிவாரணத்திற்காக 12.9 பில்லியன் ரூபாவும், திவிநெகும தேசிய வேலைத் திட்டத்திற்காக 14.4 பில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

இப்போது நாட்டில் வேலையற்றோர் எண்ணிக்கை 4.3 சத வீதம் வரை வீழ்ச்சி அடைந்துள்ளது. ஆனால் தனிமனித வருமானம் இருமடங்காக அதிகரித்துள்ளது என மேலும் தெரிவித்தார்.

# யாழ்.நகரப் பகுதியில் இடம்பெறும் அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரினை மேம்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள ஆளுநரின் உப அலுவலகத்தில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாண நகரப்பகுதி வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படுகின்றது. நகரின் சில பகுதிகள் புனரமைக்கப்பட்டு மீள்கட்டுமானப்பணிகள் நடைபெற்றுவருகின்றது. யாழ். கோட்டை, பொலிஸ் நிலையம, பேருந்துத் தரிப்பு நிலையம், துரையப்பா விளையாட்டரங்கு போன்றவை இவற்றில் அடங்கும். நீர்விநியோகத் திட்டம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இந்த புதுப்பிக்கும் நடவடிக்கை மூலம், யாழ்ப்பாண நகரம் நாட்டின் சிறந்த நகரங்களில் ஒன்றாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ர.விஜயலட்சுமி, ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், நீர்வழங்கல் சபை பொறியியலாளர், நகர அபிவிருத்தி அதிகார சபை உறுப்பினர்கள், இயல்நிலைச் சபை உறுப்பினர்கள், பொலிஸ் மற்றும் பாதுகாப்பு படையினரின் உயர் அதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டார்கள்.

# போர்க்குற்ற விடயங்கள் குறித்து இராணுவ நீதிமன்றம் விசாரணை

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின்போது இடம பெற்றதாகக் கூறப்படுகின்ற போர்க குற்ற விடயங்கள் குறித்து இராணுவ விசாரணை மன்றம் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. உண்மைச் சம்பவங்கள் குறித்து பொறுப்பு வாய்ந்த அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படுமென இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிஹால் ஹப்பு ஆராய்ச்சி தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் சனல்-4 தொலைக்காட்சியின் போர்க் குற்ற ஆவணங்கள் தொடர்பாக ஆராயப்படுவதுடன் இராணுவத்திற்கு எதிராக உள்ள போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு விசாரணை மன்றம் ஊடாக பதில் கிடைத்து விடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிஹால் ஹப்பு ஆராய்ச்சி தொடர்ந்து கூறுகையில்,

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய விசேடமான விசாரணைக் குழுவொன்றை அமைத்து இறுதி யுத்தத்தின் போது நடைபெற்ற உண்மைச் சம்பவங்கள் குறித்தும் இராணுவ வீரர்களுக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்தும் ஆராய்ந்து வருகின்றார். இவ்விசாரணைகள் குழுவின் தலைவராக கிளிநொச்சி பாதுகாப்புத் தலைமையகததின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா செயற்படுகின்றார்.



இக்குழுவானது வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட்டு உண்மைச் சம்பவங்களைக் கண்டறியும் இதனால் இராணுவத்திற்கு எதிராகக் காணப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் கிடைத்து விடும் எனத் தெரிவித்தார்.

# சிங்களக் கடும் போக்காளர்களை ஓரணியில் இணைப்பதற்குத் திட்டம்

(கொழும்பு)

பெரும்பான்மை சிங்களக் கடும் போக்காளர்களை ஓரணியில் இணைப்பதற்கான திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்று ஜாதிக ஹெல உறுமயவின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு வியட்நாமில் அமெரிக்கா கற்றுக்கொண்ட பாடத்தை இங்கு நாம் புகட்ட வேண்டுமென்றும் ஹெல உறுமய தீர்மானித்துள்ளது.

கடந்தவாரம் பத்தரமுல்லையிலுள்ள ஜாதிக ஹெல உறுமயவின் தலைமையகத்தில் அதன் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தலைமையில் கூடிய மத்திய செயற்குழுக் கூட்டத்திலேயே இவ்விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரசியல் வட்டாரங்களிலிருந்து மேலும் தெரிய வருவதாவது, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதைத் தடுக்க வேண்டும். மக்களின் எதிர்ப்பை மீறி இது நடைமுறைப்படுத்தப்பட்டால் நாட்டில் பிரச்சினைகள் தலைதூக்கும்.


இதேவேளை, அமெரிக்காவின அழுத்தங்கள், குற்றச்சாட்டுக்கள் இலங்கைக்கு எதிராக நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் எனவே இதற்கு எதிராகப் போராடும் காலம் வந்து விட்டதாகவும் ஊடகச் செயலாளர் நிஷாந்த சிறிவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு சிங்களக் கடும் போக்காளர்களை ஒன்றாகச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும் வியட்நாமில் அமெரிக்கா கற்ற பாடத்தை இல

ජාතික හෙළ උරුමය
JATHIKA HELA URUMAYA

ங்கையிலும் கற்பிக்க வேண்டுமென்ற தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி விவசாயிகளுக்கு அறுவடை இயந்திரங்கள் வழங்கல்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி விவசாயிகளுக்கு அறுவடை இயந்திரங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது. கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் குஞ்சுப்பரந்தன், கண்டாவளை, மருதநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாய அமைப்புக்களின் தலைவர்களிடம் முதற்கட்டமாக இவ் அறுவடை இயந்திரங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், வடமாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் செல்வராசா ஆகியோர் இவர்களுக்கான விவசாய உபகரணங்களை வழங்கிவைத்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் இங்கு உரையாற்றுகையில்,

விவசாய அமைப்புக்கள் ஜனநாயக ரீதியில் பலமான அமைப்புக்களாகக் கட்டியெழுப்பப்பட வேண்டும். ஜனநாயக ரீதியில் அதற்கான தெரிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

நீண்டகாலத்திற்கு முன்பிருந்தே விவசாயத்தில் நவீன தொழிநுட்பங்கள் கையாளப்பட்டு வருகின்றன ஆனால் எமது பகுதிகளில் வாழும் மக்கள் இப்போதுதான் அவ்வசதிகளைப் படிப்படியாக பெற்றுவருகின்றனர். இதன் மூலமாக இப்பகுதிகளில் விவசாயத்துறை தற்போது மேம்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது என்றார்.

# அரசாங்கத்தின் நடவடிக்கையை நியாயப்படுத்த விரும்பாத டிலான்

(கொழும்பு)

அரசாங்கத்தின் நடவடிக்கையை நாடாளுமன்றில் நியாயப்படுத்த அமைச்சர் டிலான் பெரேரா விரும்பவில்லை என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

கொழும்பில் நிரந்தரமாக வதியாத தமிழர்களை வெளியேற்றிய அரசாங்கத்தின் நடவடிக்கையை நாடாளுமன்றில் நியாயப்படுத்த முடியாது என டிலான் பெரேரா குறிப்பிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கையின் நீதி அமைச்சராக டிலான்பெரேரா கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இந்த நடவடிக்கையைக் கண்டித்தது.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஆளும் கட்சிக்குத் தாவி அமைச்சுப் பதவிகளை வகிப்போரையும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் மிதவாதக் கொள்கையுடையோரையும் கொழும்பிலிருந்து வெளியேற்றப்பட்டமை குறித்து கருத்து வெளியிட வேண்டாம் என அரசாங்கம் அறிவித்திருந்தது.

கொழும்பிலிருந்து தமிழர்கள் தொடர்ச்சியாக வெளியேற்றப்பட்டால் அரசாங்கத்தை விட்டு வெளியேறப்போவதாக மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர் இராதகிருஸ்ணன எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை நாடாளுமன்றில் நியாயப்படுத்தப் போவதில்லை என நீதி அமைச்சர் டிலான் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்ட நடவடிக்கையை மனித உரிமை அமைப்புக்களும் கடுமையாக விமர்சனம் செய்திருந்தன.

இதேவேளை, முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு விசுவாசமானவர் எனவும் முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஓ பிளேக் குறிப்பிட்டுள்ளார்.

# நாடு, நகர திருத்த சட்டமூலத்தை எதிர்க்கிறது முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

நாடு மற்றும் நகர திட்டமிடல் திருத்த சட்ட மூலத்தை எதிர்ப்பது என்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் பீடக் கூட்டம் நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்றபோதே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.


இச்சட்ட மூலத்தின் ஊடாக மாகாண சபைகளுக்குள்ள அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றன. இதனால் சிறுபான்மையினத்தவர் பாதிக்கப்படுகின்றனர். இதனாலேயே இச்சட்ட மூலத்தை எதிர்க்கின்றோம் என அவர் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்படவுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாகவே நாடு மற்றும் நகர திட்டமிடல் திருத்தச் சட்ட மூலத்திற்கு தீர்வு காணவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிணங்க எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபையில் இச்சட்ட மூலம் முன்வைக்கப்பட்டால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்த்தே வாக்களிப்பர் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் அலி தெரிவித்தார்.

குறித்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அபபோதும் எதிராகவே வாக்களிக்கும் என அவர் குறிப்பிட்டார்.

# அளவெட்டி பிரதான வீதியில் தெரு விளக்குகள் பொருத்தல்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபையினரால் அளவெட்டி பிரதான வ்திக்கு (வல்லை - சங்கானை வீதி) அண்மையில் தெரு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தத் தெரு விளக்குகள் பொருத்தப்பட்டதனை அடுத்து இரவு வேளையில் அச்சமின்றி நடமாட உதவியாக உள்ளதாக பிரதேச மக்கள தெரிவித்தனர்.

சமூக நல நோக்கிலான இச்செயற்றிட்டத்தின் கீழ் பிரதான சந்திகள் உட்பட வல்லை - சங்கானை வீதி ஒளியூட்டப்பட்டுள்ளது. பிரதேச சபை உறுப்பினர் க.மயூரதன் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், செயற்றிட்டத்தின் அடுத்த கட்டத்தில் அளவெட்டி மகாஜனாக் கல்லூரி வீதிக்கு ( அளவெட்டி - அம்பனை வீதி) விளக்குகள் பொருத்த திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# ஆசிரியர்களுக்கான கோலப்போட்டி வெற்றி பெற்றோர் விபரம்

(சாவகச்சேரி)

மாணவர்களுக்கு கோலப்போட்டியில் பங்குபற்றுவதற்கான பயிற்சியினை வழங்கும் ஆசிரியர்கள் கோலம் போடுவதற்கான நுட்பம், அறிவினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற வகையில் ஆசிரியர்களுக்கான கோலப்போட்டிகள் அண்மையில் தென்மராட்சி கல்வி வலயத்தில் இடம்பெற்றது.

இதன்படி இந்தப்போட்டியில் வெற்றிபெற்ற ஆசிரியர்கள் விபரம் வருமாறு,

கைதடி விக்கினேஸ்வரா ம.வி. திருமதி.சி.கிருஸ்ணமூர்த்தி, விடத்தற்பளை கமலாசனி வித்தி திருமதி.ப.சுதாகரன், கச்சாய் அ.த.க.பா திருமதி.ச.கோணேஸ்வரன், மிருசுவில் அ.த.க.பா. திருமதி.வீ.பாலதேவா, சாவகச்சேரி இந்துக் கல்லூரி திருமதி.வி. மகேந்திரன், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி திருமதி.த.தெய்வேந்திரன், சரசாலை சரஸ்வதி வித்தி. திருமதி.வி.திருச்செல்வம், மந்துவில் றோ.க.த.க.பா. செல்வி.நா.கமலநந்தினி, மீசாலை வீரசிங்கம் ம.வி. செல்வி.செ.ஜனனி, உசன் இராமநாதன் ம.வி. திருமதி.க.திருச்செல்வம், கைதடி நவீல்ட் பாடசாலை அசோக்.

# இலங்கை பணிப்பெண் லெபனானில் தற்கொலை

(கொழும்பு)

லெபனானின் மேட்ன் பிராந்தியத்திலுள்ள ஜெடைதா பகுதியில் இலங்கைப் பணிப்பெண் ஒருவர் தற்கொலை செய்துள்ளதாக த டெய்லி ஸ்டார் பத்திரிகை தெரிவித்துள்ளது.

28 வயதான குறித்த இலங்கைப் பணிப்பெண், சுத்திகரிப்பாளராக பணியாற்றிய சான்ர மரையா கட்டடத்தில் தற்கொலை செய்துகொண்டதாக பொலிஸார் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண் மீது வீட்டு உரிமையாளர்களோ வேறு நபர்களோ வன்முறை புரியவில்லை என பிரேத பரிசோதனை மூலம் தெரிய வந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.



அவுஸ்ரேலிய உயர் ஸ்தானிகராலய அனுசரணையில் திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் கலைகளின் பரிமாற்ற கண்டிய நடன நிகழ்வு நேற்று முன்தினம் மானிப்பாய் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றதைக் காணலாம். (52)

# ஜனாதிபதியை சினமாக்கிய ரணிலின் பத்துப் பக்க அறிக்கை

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட அறிக்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு சினத்தை ஏற்படுத்தியிருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டுநாள் பயணமாக பாகிஸ்தான் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இஸ்லாமாபாத்திலுள்ள செரீனா விடுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை தங்கியிருந்தபோது, கொழும்பில் இருந்து கிடைத்த தகவலை வெளிவிவகார அமைச்சர் ஜிஎல்பீரிஸ் தெரியப்படுத்தினார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் 10 பக்கங்கள் அடங்கிய அறிக்கையை ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ளதாக அவர் கூறினார்.

அதே அறிக்கையை ஜனாதிபதிக்கு ஒரு நாள் முன்னதாக ரணில் விக்கிரமசிங்க அனுப்பியிருந்தார்.

ஆனால் அப்போது அவர் பாகிஸ்தான் புறப்பட்டிருந்ததால், அந்தக் கடிதம் பிரிக்கப்படாமல் கொழும்பிலேயே இருந்தது. ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க கொழும்பில் இருந்த ஐ.தே.க. முன்னாள் தவிசாளரும், ரணில் விக்கிரமசிங்கவின் நம்பிக்கைக்குரியவருமான மலிக் சமரவிக்கிரமவை தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

ஐ.தே.க.வின் அறிக்கை தொடர்பான ஜனாதிபதியின் கவலையை சுருக்கமாகக் கூறிய லலித் வீரதுங்க தொலைபேசியை வெளிவிவகார அமைச்சர் பீரிஸிடம் கொடுத்தார்.

பீரிஸும் தனது கவலையை அவரிடம் தெரியப்படுத்திவிட்டு ஜனாதிபதியிடம் தொலைபேசியைக் கொடுத்தார்.

விக்கிரமசிங்க ஏன் இப்படிச் செய்கிறார்? என்று மலிக் சமரவிக்கிரமவிடம் சிங்களத்தில் கேட்டார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

இந்தப் பதில் ஒன்றே இலங்கை விவகாரத்தை அனைத்துலகமயப்படுத்தப் போதும் என்று ராஜபக்ஷ கூறினார்.

பின்னர், இந்த விவகாரத்தை ரணிலுக்கு எடுத்துச் சொன்னார் மலிக் சமரவிக்கிரம.

நாடாளுமன்றத்தில் தான் வெளியிட்ட அறிக்கை உடனடியாகவே தாக்கத்தை ஏற்படுத்தியதையிட்டு ரணில் விக்கிரமசிங்க மகிழ்ச்சியடைந்தார் என அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

# பிழையான தீர்மானங்கள் மக்களுக்குப் பாரிய சுமை

(கொழும்பு)

எரிபொருட்களின் விலை உயர்வுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பிழையான தீர்மானங்களின் விளைவாகவே இந்நிலைமை தோன்றியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாத்தளை மாவட்டத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே தயாசிறி ஜயசேகர இவ்வாறு தெரிவித்தார்.

எரிபொருட்களை இறக்குமதி செய்து கொள்வது தொடர்பில் அரசு ஈரானுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக தற்போது ஏனைய நாடுகளிடம் உதவியைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர குற்றஞ்சுமத்தினார்.

# தென்மராட்சி கல்வி வலயத்தில் ஒலிம்பியாட் பயிற்சி வகுப்புகள்



(சாவகச்சேரி)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 179 புள்ளிகளுக்கு மேல்பெற்ற மாணவர்களுக்கான ஒலிம்பியாட் பயிற்சி வகுப்புக்கள் கடந்த எட்டு மற்றும் பத்தாம் திகதிகளில் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

இந்தப் பயிற்சி வகுப்புக்களில் தென்மராட்சி, முல்லைத்தீவு, கிளிநொச்சி கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றி பயனடைந்தனர்.

# வடமாகாண கல்வித் துறையின் முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண கல்வித்துறையின் முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் கடந்த 13 ஆம் திகதி யாழ் பொது நூலகத்தில அமைந்துள்ள வட மாகாண கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலக பொறியியலாளர் எந்திரி.எஸ்.சிறிகாந் கட்டட ஒப்பந்தக்காரர்களுடன் புனரமைக்கப்படும் கட்டடங்களின் முன்னேற்ற நிலை தொடர்பாகக் கலந்துரையாடினார்.

குறித்த திட்டத்திற்கான காலம் முடிவடைய முன் வேலைகளைத் துரிதப்படுத்தி முடிக்குமாறு கட்டட ஒப்பந்தக்காரர்களிடம் பொறியியலாளர் கேட்டுக்கொண்டார். இத்திட்டம் 3 தொகுதிகளாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

முதல் தொகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தினைச் சேர்ந்த 34 பாடசாலைகளும், இரண்டாவது தொகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தினைச் சேர்ந்த 14 பாடசாலைகளும் மூன்றாவது தொகுதியில் துணுக்காய் கல்வி வலயத்தினைச் சேர்ந்த 25 பாடசாலைகளும் வவுனியா வடக்கு கல்வி வலயத்தினைச் சேர்ந்த 06 பாடசாலைகளும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வட மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.இ.எஸ். ராஜேந்திரா, வட மாகாண கல்வி அமைச்சின் பாடசாலைகள் வேலைகள் பிரிவின் பணிப்பாளர் எந்திரி.கே.குகனேசன், திட்டமிடல் உதவிக்கல்விப் பணிப்பாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

# 19 வயது பாடசாலை மட்ட கிரிக்கெட் 5 விக்கெட்டால் யாழ். இந்து வெற்றி

(அளவெட்டி)

இலங்கை பாடசாலைகள் 19 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்ட போட்டியொன்றில் யாழ. மத்திய கல்லூரியை 5 விக்கெட்டுக்களால் யாழ். இந்துக்கல்லூரி வெற்றிகொண்டது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதல் இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி அணி 40 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 117 ஓட்டங்களைப்பெற்றது. அந்த அணி சார்பாக கபிலன் 32, யூலியஸ் 25, சர்மின் 19, டார்வின் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மதுசன் 5, றொஷாந்த் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்குத் தனது முதல் இனிங்ஸை ஆடிய இந்துக் கல்லூரி, சஜிவனின் சிறப்பான சதம் மூலம், 60 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றது. இந்துக் கல்லூரி சார்பாக சஜிவன் 118, மதுசன் 60, வாமணன் 26, சஜீகன் 19 ஓட்டங்களைப் பெற்றனர்.பந்து வீச்சில் கோகுலன் 5, ஹரிகரன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இரண்டவது இனிங்ஸைத் தொடர்ந்த மத்திய கல்லூரி 246 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும்இழந்து இதில் சரமின் 51, கோகுலன் 42, சௌமிதரன் 32, நிஷாந்தன் 26 ஓட்டங்களைப் பெற்றனர்.

93 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனத்தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணியினர் 5 விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றனர்.

(93)

# உடுவில் பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகள்

(அளவெட்டி)

உடுவில் பிரதேச செயலக விளையாட்டுப்போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இதன்படி ஆண், பெண்களுக்கான கபடிப்போட்டி எதிர்வரும் 25ஆம் திகதி ஏழாலை கண்ணகி விளையாட்டுக்கழக மைதானத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

26ஆம் திகதி ஆண்,பெண்களுக்கான எல்லே போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்திலும், 27,28 ஆம் திகதிகளில் ஆண்,பெண் கூடைப்பந்தாட்டம் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் மாலை 3 மணிக்கும், 31 ஆம் திகதி உதைபந்தாட்டம் காலை 8.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தா மைதானத் திலும், 7ஆம் திகதி வலைப்பநது சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மைதானத்திலும், 10ஆம் திகதி மெய்வல்லுநர் போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்தா மைதானத்தில் நடைபெறும். (93)

# தேசிய மட்ட கூடைப்பந்தாட்டம் கிளிநொச்சி மாவட்ட அணி வெற்றி

(அளவெட்டி)

தேசிய மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் முதன்முறையாகப் பங்கு பற்றிய கிளிநொச்சி மாவட்ட அணி, வெற்றி பெற்று அனைவரினதும் பாராட்டைப் பெற்றுள்ளது.

வெள்ளவத்தை பொலிஸ் பார்க் மைதானத்தில் கடந்த 18ஆம் திகதி நடந்த இந்தப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணி மாத்தறை மாவட்ட அணியுடன் மோதியது.

ஆரம்ப முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டஅணி தனது ஆத்திக்கத்தைச் செலுத்தியது. இறுதியில் 46:23 என்ற கணக்கில் கிளிநொச்சி மாவட்ட அணி வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றது. (93)



காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் இடம் பெற்ற இல்லமெய்வல்லுநர்போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஈ.பி.டி.பியின் காரைநகர் பிரதேச அமைப்பாளரும், பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான கண்ணன் மாணவியொருவருக்கு பரிசில் வழங்குவதைக் காணலாம்.


# மென்பந்தாட்டம்

(அளவெட்டி)

யாழ். கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கிடையேயான 19 வயதுப்பிரிவினருக்கான மென்பந்தாட்டப்போட்டி இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள போட்டி கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (93)

# பொண்டிங் நீக்கம்



அவுஸ்ரேலிய ஒருதின கிரிக்கெட் போட்டித் தொடரில் இருந்து அந்த அணியின் முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங் நீக்கப்பட்டுள்ளார். இந்தியா மற்றும் இலங்கைக்கு எதிரான 5 இனிங்சில் பொண்டிங் சராசரியாக 3.6 ரன்களை எடுத்திருந்தார். இதனால் அதிருப்தியில் இருந்த தேர்வுக்குழுவினர் நேற்று அவரை அணியில் இருந்து நீக்குவதாக அறிவித்துள்ளனர்.

# தெல்லிப்பளை கோட்ட கரப்பந்தாட்டம்; முதல் மூன்று இடம்பிடித்த பாடசாலைகள்

(அளவெட்டி)

தெல்லிப்பளை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகள் வருமாறு:

கடந்த 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் மல்லாகம் மகாவித்தியாலயத்தில் பெண்களுக்கான போட்டிகள் நடைபெற்றது.

**15 வயதுப் பிரிவு**

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம், அளவெட்டி அருணோதயக் கல்லூரி, வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு**

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம், இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்,

ஆண்களுக்கான போட்டிகள் கடந்த 16,17 ஆம் திகதிகளில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

**15 வயதுப் பிரிவு**

வசாவிளான் மத்திய மகாவித்தியலயம், இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு**

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம், வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்

**19 வயதுப் பிரிவு**

இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்,தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம்.

(93)

# சம்பியனானார் பெடரர்

உலக உள்ளக டென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டத்தினை சுவிட்ஸர்லாந்தின் ரொஜர பெடரர் சுவீகரித்தார்.



இந்தப் போடடியில் ஆர்ஜென்ரினாவின் ஜுவன் மாட்டின் டெல் போற்றோவை 2 : 0 என்ற செட கணக்கில் ரொஜர் பெடரர் வெற்றி கொண்டார். இந்தப் போட்டியில் 6 -1 எனற புள்ளிகள் கணக்கில் முதல் செட்டை கைப்பற்றிய பெடரர், இரண்டாவது செட்டை 6 - 4 என தன் வசப்படுத்தினார்.

# பாகிஸ்தான் பயிற்றுனராக டேவ் வட்மோர் நியமனம்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளராக இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளின் முன்னாள் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் நியமிக்கப்படவுள்ளார். பாகிஸ்தான் அணியின் இடைக் காலப் பயிற்றுவிப்பாளராக மொய்சீன் கான் செயற்பட்டு வரும் நிலையில், பாகிஸ்தான் கிரிக்கெட் நிறுவனத்தை மேற்கோள் காட்டி ரொய்ட்டர் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

பங்காளதேஷில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஆசிய கிண்ணத் தொடரில் பங்கேற்றவுள்ள பாகிஸ்தான் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக வட்மோர் பொறுப்பேற்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து தொடரின் பின்னர் பயிற்றுவிப்பாளர் பதவியில் இருந்து மொய்சீன் கான் விடுவிக்கப்படவுள்ளதுடன், அடுத்த இரண்டு வருடங்களுக்கு வட்மோர் பயிற்றுவிப்பாளராக செயற்படவுள்ளார்.

1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்றெடுத்த இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளராக 57 வயதான டேவ் வட்மோர் செயற்பட்டிருந்தார். இதனையடுத்து 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரை பங்களாதேஷ் அணியின் பயிற்றுவிப்பாளராக பணியாற்றிய வட்மோர், பங்களாதேஷிற்கு முதலாவது டெஸ்ட் வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார்.

# இருபது 20 போட்டியில் அதிவேக சதம்; தென்னாபிரிக்க வீரர் புதிய சாதனை




தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் ரிச்சர்ட் லெவி இருபது 20 போட்டியில் அதி வேக சதம் குவித்து சாதனை படைத்துள்ளார்.

நியூஸிலாந்தின் ஹமில்டன் நகரில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற நியூஸிலாந்து அணியுடனான போட்டியில் அவர் 45 பந்துகளில் சதத்தை பூர்த்தி செய்தார். இவற்றில் 12 சிக்ஸர்கள் மற்றும் 4 பௌண்டரிகளும் அடங்கும்.

இந்தப் போட்டியில் அவர் மொத்தமாக 51 பந்துகளில் 13 சிக்ஸர்கள் உட்பட 117 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

24 வயதான ரிச்சர்ட் லெவி, விளையாடிய இரண்டாவது சர்வதேசப் போட்டி இதுவாகும். இந்தத் தொடரின் முதலாவது இருபது 20 போட்டியில் பங்கு பற்றிய அவர் 13 ஓடடங்களைப் பெற்றிருந்தார்.

இந்தப் போட்டியில் லெவியின் அதிரடி துடுப்பாட்டம் மூலம் நியூஸிலந்து அணியை தென்னாபிரிக்க அணி 8 விக்கெட்டுகளால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 20 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 174 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 16 ஓவரகளில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

# கூடங்குளம் அணு உலைக்கு ஆபத்து இல்லையென அறிவிப்பு



(திருநெல்வேலி)

கூடங்குளத்தில் சுனாமி வந்தாலும், ரிக்டர் அளவில் 6.5 என்ற அளவில் பூகம்பம் வந்தாலும் கூடங்குளம் அணுஉலைக்கு ஆபத்து இல்லை என தமிழக நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

தமிழக அரசின் நிபுணர் குழு ஒருங்கிணைப்பாளர் இனியன் இது தொடர்பாக நிருபர்களிடம் கூறியதாவது,

கடலிலிருந்து தண்ணீர் எடுக்கும் பகுதி அணுஉலை அமைக்கப்பட்டிருக்கும் பகுதி உள்ளிட்ட அனைத்து இடங்களுக்கும் சென்று ஆய்வு நடத்தினோம். அணு உலையின் பாதுகாப்புக் குறித்து விஞ்ஞானிகள் எடுத்துரைத்தனர். இந்த அணு உலை மிகச் சிறப்பான பாதுகாப்பு அம்சங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. பூகம்பம் ஏற்பட்டாலும், சுனாமிப் பேரலை ஏற்பட்டாலும் பாதிப்பு ஏற்படாத வகையில அமைக்கப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் விளக்கினர்.

அணுஉலையை முழுமையாக ஆய்வு செய்த பிறகு போராட்டக் குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். மக்கள் உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் வகையில் பிரதிநிதிகள் 9 பேரைச் சந்தித்து பேசினோம். மக்களின் அச்சங்களை அவர்களின் வாயிலாக தெரிந்து கொள்ள முடிந்தது. இவ்வாறு அவர் கூறினார்.

இதேவேளை போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் கூறியதாவது,

தமிழக அரசு அமைத்துள்ள நிபுணர் குழுவினருடன் பேச்சுவார்த்தை நல்ல முறையில் சுமூகமாக நடந்தது. கூடங்குளம் அணுமின் நிலையத்தின் பாதுகாப்புக் குறித்து ஆய்வு செய்ததை அவர்கள் எங்களிடம் விளக்கினர். பிரச்சினையை விரைவில் முடிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தையும் தமிழக அரசு தெரிவிக்கவில்லை.

கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு எதிரான எங்களது போராட்டம் தொடரும். அணுமின் நிலையத்தை மூடும் வரை எங்களது போராட்டம் தொடரும் எனபதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## பழம்பெரும் நடிகை லட்சுமி மாரடைப்பால் மரணம்



(சென்னை)

பழம்பெரும் நடிகை எஸ்.என்.லட்சுமி நேற்றுமுன்தினமிரவு காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 84.

அண்மையில் கீழே தவறி விழுந்து இடுப்பில் எலும்பு முறிவு ஏற்பட்டு அவதிப்பட்ட அவருக்கு வடபழனியல் உள்ள தனியார் வைத்திய சாலையில் சத்திரசிகிச்சை நடந்தது.

வைத்தியசாலையிலேயே தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி மரணம டைந்தார்.

இவரது உடல் சாலிகிராமத்தில் உள்ள வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிச் சடங்குகள் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள இவரது சொந்த கிராமத்தில் இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறும் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

எஸ்.என். லட்சுமி உடலுக்கு நடிகர்-நடிகைகள் உள்ளிட்ட திரையுலக பிரமுகர்கள் நேரில் அஞ்சலி செலுத்தினார்கள.

எம்.ஜி.ஆர், சிவாஜி, கமல் உட்படப் பல்வேறு நடிகர்களுடனும் சின்னத்திரையிலும் இவர் நடித்துள்ளார்.

# தேர்தல் பிரசார மேடையில் பணம் வழங்கியதால் பரபரப்பு



(சென்னை)

உத்தரப் பிரதேச தேர்தல் பிரசாரத்தின்போது மேடையில் வைத்து ராஷ்ட்ரிய லோக்தால் கட்சி, பணம் வழங்கிய விவகாரம் சூடுபிடித்துள்ளது.

மத்திய அமைச்சர் அஜித்சிங்கின் மகனும் ராஷ்டிரிய லோக்தால் தலைவருமான ஜெயந்த் சௌத்ரி உத்திர பிரதேசத்தில் தேர்தல் பிரசாரம் செய்து வருகிறார்.





அப்போது அவர் அந்தப் பகுதியில் உள்ள ராஷ்டிரிய லோக்தால் கட்சியின் தலைவரிடம் இருந்து ரூபா 70,000 பெற்று அப்பகுதி வேட்பாளரிடம் வழங்கினார்.

பணத்தை பெற்றுகொண்ட வேட்பாளர் அதனை மீண்டும் சௌத்ரியிடம் கொடுத்தார். பின்பு அந்தப் பணத்தை தனது உறவினரிடம் வழங்கினார்.

இந்த நடவடிக்கை முழுவதும் தெளிவாக புகைப்படக் கருவியில் பதிவாகியுள்ளது. இதையடுத்து இந்த சம்பவம் குறித்து ஜெயந்த சௌத்ரியிடம் தேர்தல் ஆணையம் விளக்கம் கேட்டுள்ளது.

# தொலைத் தொடர்பு நிறுவனங்கள் நம்பிக்கையை இழக்கக்கூடாது

## அமைச்சர் கபில் சிபல் தெரிவிப்பு

(புதுடில்லி)

தொலைத்தொடர்புத் துறையில் முதலீடு செய்துள்ள நிறுவனங்கள், நம்பிக்கை இழக்க வேண்டாம் என மத்திய தொலைத தொடர்புத்துறை அமைச்சர் கபில் சிபல் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக மத்திய தொலைத்தொடர் புத்துறை அமைச்சர் கபில் சிபல் கூறியதாவது,


2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு தொடர்பான வழக்கில், தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட 122 உரிமங்களை இரத்துச் செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனால் ஒதுக்கீடு பெற்ற தொலைத்தொடர்பு நிறுவனங்களின் முதலீடு பாதிக்கப்படும் என ஒரு சிலர் கூறுகின்றனர். ஒதுக்கீடு பெற்ற வெளிநாட்டு நிறுவனங்கள், இந்தியாவில் இருந்து வெளியேறவுள்ளதாகவும் சிலர் கூறுகின்றனர்.

இது தவறான தகவல். எனவே இத்துறையில் முதலீடு செய்துள்ள நிறுவனங்கள் நம்பிக்கை இழக்க வேண்டிய அவசியம் இல்லை.


தொலைத்தொடர்புக் கொள்கை குறித்த விஷயத்தில் தான் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் கவலைப்படுகின்றனவே தவிர உரிமம் தொடர்பான விஷயத்தில் கவலைப்படவில்லை. உரிமங்கள் வழங்கும் விவகாரத தில் ஒரே மாதிரியான அணுகு முறைதான் இனி பின்பற்றப்படும்.

எனவே, முதலீடு செய்துள்ள நிறுவனங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. புதிய ஏல முறையை



நான்கு மாதங்களுக்குள் முடிகக வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் தொழிலநுட்ப நிபுணர்களிடம் ஆலோசனை கேட்க வேண்டியுள்ளது. எனவே,உயர் நீதிமன்றம் அளிததுள்ள கால வரையறையை நீடிக்கும்படி வலியுறுத்துவதற்கும வாய்ப்பு உள்ளது. இவ்வாறு கபில் சிபல் கூறினார்.





# மாணவர்களின் கற்றல் அனுபவம் இனிமையாக இருப்பது அவசியம்

## முன்னாள் ஜனாதிபதி கலாம் தெரிவிப்பு

(கோவை)

மாணவர்களின் திறமையைக் கண்டறிந்து பெற்றோர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு திறமையை வளர்க்க வேண்டும் மாணவர்களுக்கு கற்றல் ஒரு இனிமையான அனுபவமாக இருக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்தார்.

தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணியின் 16 ஆவது மாநிலவிழாவில் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் பங்கேற்றுப் பேசியதாவது

நாம் எல்லோரும் ஏதாவது ஒரு வகையில் பரபரப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். வலைத் தளங்கள் பொழுதுபோக்கு அம்சங்களில் மூழ்கி விடுகிறோம். இளைய சமுதாயத்தின் மீதான எண்ணங்கள், அவர்கள் என்ன செய்கின்றனர் என்பதை பெற்றோரும் கவனிக்க இயலாத சூழலும் ஏற்படுகிறது.

பெற்றோர்கள் குழந்தைகளைக் கவனிக்காவிட்டால், அவர்களது பாதை வன்முறையிலோ வேறு வகையிலோ சென்றுவிடும். பெற்றோரும், ஆசிரியரும் குழந்தைகள் மீது கவனம் செலுத்தினால் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும்.

மாணவர்களின் திறமையை வெளிக் கொணர அவர்களது தோல்வி மனப்பான்மை காரணமாக அமைகிறது. இதை விலக்க வேண்டும். மாணவர்களுக்கு இயல், இசை, நாடகம், விளையாட்டு போன்றவற்றில் அதிகநேரம் செலவிட வாய்ப்பளிக்க வேண்டும். பாடச் சுமையைக் குறைத்து கற்றலில் இனிமையை வளர்க்க வேண்டும்.



குழந்தைகள் ஆறு வயது வரை பெற்றோர்களின் அரவணைப்பில் வளர வேண்டும். ஏழு வயதில் மட்டுமே முதலாம் வகுப்பில் சேர்க்க வேண்டும்.

மாணவர்களின் கேள்வியை ஆசிரியர்கள் உன்னிப்பாகக் கவனித்து சரியாகப் பதிலளிக்க வேண்டும். அவர்களோடு கலந்துரையாடுவதோடு, மாணவர்கள் கூறும் கருத்துக்களையும் கூர்ந்து கேட்கவேண்டும். அப்போது தான், அவரகளின் மனம் அமைதியடைவதோடு ஆற்றல் வெளிப்படுத்துவதாக அமையும். ஆக்கபூர்வமான இளைய சமுதாயத்தை உருவாக்குவதில், ஆசிரியர்களுக்கு பங்கு உண்டு.

ஆசிரியர்கள் கற்பிக்கும் கல்வி மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதாகவும், சிந்திக்கும் திறனை வளர்ப்பதாகவும் இருக்கவேண்டும். ஒவ்வொரு மாணவருக்கும் உள்ள திறமையை வெளிக்கொணர பெற்றோர்களும், ஆசிரியர்களும் ஊக்குவிப்பதோடு உறுதுணையாகவும் இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# கின்னஸில் இடம்பிடித்த 48 அடி நீளமான தோசை

(புதுடில்லி)

மதுரையில் நடைபெற்ற கண்காட்சி ஒன்றில் 48 அடி நீள தோசையை உருவாக்கி கின்னஸ் சாதனை படைக்கப் பட்டுள்ளது.


இந்தச் சாதனை மூலம், ஏற்கனவே ஆந்திரா மாநிலம் விஜயவாடா ஹோட்டல் அசோசியேசன் சார்பில் மேற்கொள்ளப் பட்டிருந்த 38.2 அடி நீள தோசை கின்னஸ் சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கின்னஸ் சாதனைக்கு முழு ஒத்துழைப்பு அளித்த 20 தோசை மாஸ்டர்கள் மற்றும் மக்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக சாதனை நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் சமையற் கலைஞர் தாமோதரன் தெரிவிததுள்ளார்.



இக்கண்காட்சியின் மூலம் கிடைக்கும் பணம், அரசுப் பள்ளிகள் மற்றும் அனாதை இல்லங்களில் படித்து வரும் குழந்தைகளின் கல்விக்காகப் பயன்படுத்தப்படவுள்ளது குறிப்பிடத்தககது.

# யுரேனியம் செறிவூட்டலை அதிகரிக்கும் நவீன கருவிகளை நிறுவுகிறது ஈரான்



(லண்டன்)

சர்வதேச அணுசக்தி முகவரமைப்பின் (ஐ.ஏ.இ.ஏ.) பிரதிநிதிகள் இந்த வாரத்தில் ஈரானுக்கு செல்ல உள்ள நிலையில், அந்நாடு தனது அணுசக்தி நிலையம் ஒன்றில், யுரேனியம் செறிவூட்டலை மும்மடங்கு செய்யவல்ல நவீன . ரக கருவிகளை நிறுவும் பணியில் முழுவீச்சில் இறங்கியுள்ளது.

ஈரானின் அணுசக்தி திட்டங்கள் மேற்குலகம் மற்றும் அமெரிக்காவால் சந்தேகத்தோடு பார்க்கப்படும் நிலையில், அவை குறித்து ஆராய்வதற்காக, இந்த வாரத்தில் ஐ.ஏ.இ.ஏ. பிரதிநிதிகள் குழு ஒன்று ஈரானுக்கு செல்லத் திட்டமிட்டுள்ளது. கடந்த மாதம் இக்குழு ஈரானுக்குச் சென்றிருந்த போது, சில அணுசக்தி நிலையங்களை ஆய்வு செய்ய அந்நாட்டு அரசுஅனுமதிக்கவில்லை. இம்முறை தடை செய்யப்பட்ட நிலையங்களிலும், இக்குழு ஆய்வு செய்யக் கூடும். யுரேனியம் செறிவூட்டலை மும்மடங்கு நடத்தும் நவீன ரககருவிகள் உட்பட, அணுசக்தி தயாரிப்பில் உள்நாட்டுத் தொழில்நுட்பம் மூலம் பல மடங்கு முன்னேறியிருப்பதாக, சமீபத்தில் ஈரான் அறிவித்தது. இதையடுத்து, சர்வதேச அளவில் ஈரான் மீதான பதற்றம் மேலும் அதிகரித்தது. இந்நிலையில், தலைநகர் தெஹ்ரானில் இருந்து 156 கி.மீ.தென்மேற்கில் உள்ள கோம் நகரின் போர்டோ பகுதியில் இயங்கி வரும் யுரேனியம் செறிவூட்டல் நிலையத்தில், நவீன ரக கருவிகளை நிறுவும் பணிகள் துவங்கப்பட்டு விட்டதாக, தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜப்பான் தலைநகர் டோக்கி யோவில், கடந்த சனிக்கிழமை பேசிய இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் எகுத் பராக், ஈரானின் அணு ஆயுதத் தயாரிப்பு, மத்திய கிழக்கில் ஆயுதப் போட்டியை உருவாக்கும் என்பதால், அந்நாட்டின் மீது சர்வதேச சமூகம் கடும்

பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் எனகேட்டுக் கொண்டார்.

# கறுப்பு நிற ஓட்டையால் விண்மீன்களுக்கு பேராபத்து


அவுஸ்ரேலியாவில் உள்ள சிட்னி விண்வெளி ஆய்வு மையத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் ஹப்பிள் டெலஸ்கோப் மூலம் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது பூமியில் இருந்து 29 கோடி ஒளி ஆண்டு தூரத்தில் உள்ள விண்மீன் கூட்டத்தில் கருப்பு நிற ஓட்டை இருப்பதை கண்டு பிடித்தனர்.

அது குறித்து தீவிரமாக ஆராய்ச்சி செய்தனர். இந்த ஓட்டை ஏற்பட்டதன் மூலம் சிறிய விண்மீன்கள் அழியும் ஆபத்து ஏற்படும். இந்த விண்மீன்கள் சுமார் 20 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியவை. தொடக்கத்தில் சிறிய விண்மீன்களைத் துவம்சம் செய்யும் கருப்பு நிற



ஓட்டை மெல்ல மெல்ல பெரிய விண்மீன்களையும் அழிக்கும் ஆபத்து உள்ளது என விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

# பெனாசீரை கொல்ல முயன்ற முஷாரப்பின் திட்டம் அம்பலம்



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசீரை கொலை செய்ய முன்னாள் ஜனாதிபதி முஷாரப் இருமுறை சதித்திட்டம் தீட்டியது அம்பலமாகியுள்ளது.

இதுகுறித்து தொலைக்காட்சி ஒன்றில் வெளியிடப்பட்ட செய்தியில், பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் கடந்த 2007ஆம் ஆண்டு நாடு திரும்ப முயன்ற அந்நாட்டு முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவை கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டினார்.

இதற்காக நம்பிக்கைக்கு உரிய இரு பொலிஸ் அதிகாரிகள் மற்றும் தக்ரீக் இ தலிபான் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த பைத்துல்லா மசூத ஆகியோரின் துணையுடன் இதற்கான சதித்திட்டம் தீட்டியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து விசாரணை அறிக்கை அந்நாட்டு சிந்துமாகாண சட்டசபையில் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ஜேர்மன், இத்தாலியிலிருந்து 11ஆயிரம் படையினர் குறைப்பு

## அமெரிக்கா அறிவிப்பு

ஜேர்மன் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளிலிருந்து 11 ஆயிரம் துருப்புக்களை விலக்கி கொள்ளப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. ஆசியப் பிராந்தியத்தில் தனது தந்திரோபாய நகர்வுகளை மேற்கொள்வதற்காக தாம் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ள அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் அணியுடன் தாம்நெருங்கிய பிணைப்பை தொடரப் போவதாகவும் அறிவித்துள்ளது.

ஐரோப்பாவில் நிரந்தரமாக வைத்திருக்கும் துருப்புக்களைக் குறைப்பதன் மூலம் ஐரோப்பிய பங்காளிகளுடனான தொடர்பு குறைந்து விடும் என்று எண்ணக்கூடாது என்று பென்டகன் செயலாளர் ஜோர்ஜ் லிட்டில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இரண்டு இராணுவ பிரிகேட்கள், இரண்டு விமானப்பிரிவுகள் ஆகியன குறைக்கப்படும் துருப்புக்களில் அடங்குகின்றன என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனேற்றா ஜேர்மன் பாதுகாப்பு அமைச்சருடன் நடத்திய பேச்சுக்களின் போது தெரிவித்தார்.

இப்படைக்குறைப்பு நடவடிக்கை நேட்டோ அணியினுடனான வொஷிங்டனின் கடப்பாட்டை குறைக்கமாட்டாது என்றும் கூட்டுச்செய்தியாளர் மாநாட்டில் அவர் தெரிவித்தார். ஜேர்மனியில் 40 ஆயிரம் அமெரிக்கத் துருப்புக்கள் தொடர்ந்து இருக்கும் என்று பென்டகன் தலைவர் தெரிவித்தார்.இவ்வாண்டின் பிற்பகுதியில் அமெரிக்கத் துருப்புக்கள் குறைப்பு ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது. பனிப்போர் காலத்தில் ஐரோப்பா கண்டத்தில் ஒரு கட்டத்தில் 270,000 அமெரிக்க துருபபுகள் நிலைகொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# பதிவிறக்கப் பெட்டகம்

தகாத உறவுகள் மற்றும் சிதைந்த உள்ளங்கள் இவைபற்றி எனக்கு எந்த ஆட்சேபனையுமில்லை. மாறாக எப்போதாவது ஒரு சிரிப்பு என்பது யாருக்கும் எந்தத் தீங்கும் விளைவித்ததில்லை. **– பி.ஜி.வுட்ஹவுஸ்**

பல்வேறு முறைகளில் மனிதர் தமது மதிநுட்பத்தை புலப் படுத்தியுள்ளனர். ஆனால் எல்லோரும் ஒரே மாதிரியாகத்தான் எப்பொழுதும் சிரித்து வந்துள்ளனர். **– சாமுவேல் ஜோன்சன்**

சிரிப்புதான் மனிதனின் ஒரே எதிர்ப்புணர்ச்சி. அதிகாரத்தை எதிர்கொள்வதற்கு சிரிப்பைத் தவிர வேறு வழிகள் இல்லை. **– மிலன் குந்தேரா**

உடலியல் ரீதியாகப் பார்த்தால், முகத்தின் 15 தசைநார்களின் ஒருங்கிணைந்த குறுக்கம். இந்தத் தன்னியல்புச் செய்கையை உண்டுபண்ணும் ஒருவகைத் தூண்டுகையே நகைச் சுவை. **– சாமுவேல்**

இருவேறு முரண்பட்ட தளங்களின் மோதலே நகைச் சுவையை உண்டுபண்ணுகிறது. **– ஆர்த்தர் கேஸ்லர்**

உலகத்திலேயே உண்மையான கலை என்பது சிரிப்புத்தான். நகைச்சுவை பண்ணுவதுதான். இதனை நீங்கள் போலித்தனமாகச் செய்யவே முடியாது. ஒரு மணி நேரத்துக்குள் மூன்று தடவை போலித்தனமாக சிரிக்க முயன்று பாருங்களேன். ஹா ஹா ஹா ஹா ஹா... அவர்கள் உங்களை பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விடுவார்கள். உங்களால் சிரிப்பு வராமல் போலியாக தொடர்ந்து சிரிக்கவே முடியாது. **– லென்னி புரூஸ்**

அடக்கியொடுக்கப்பட்ட உணர்ச்சிகள் சிரிப்பின் மூலம் விடுவிக்கப்படுகின்றன. **– சிக்மண்ட் ஃப்ரெய்ட்**

சிரிக்க வைத்து, சிந்திக்கச் செய்வது தனது பாணி என்றார். இவ்வளவு சிரிக்க வைத்த பின்பும் ஏன் உங்களால் சிந்திக்க முடியவில்லை என்று நான் அவரிடம் கேட்கவில்லை. **– சுந்தர ராமசாமி**

சிந்திக்கின்றவர்களுக்கு உலகம் ஒரு நகைச்சுவை நாடகம். உணர்கின்றவர்களுக்கு உலகம் ஒரு துன்பியல் நாடகம். **– வால்போல்**

முட்டாள்தனத்தை தனது அடையாளமாகக் கொள்வதே பெரும்பான்மை நகைச்சுவை நடிகர்களின் பாணி. அந்த முட்டாள்தனத்தின் பின்னே பகிர்ந்து கொள்ளப்படாத அன்பிருக்கிறது. வாழ்வியல் தந்திரங்களுக்கு தன்னை ஒப்புக்கொடுக்க முடியாதவனின் அவலம் ஒளிந்திருக்கிறது. **– எஸ்.ராமகிருஷ்ணன்**

வாய்விட்டுச் சிரிப்பதற்கு எத்தனை பேருக்கு லபித்திருக்கிறது. வாய் என்பது சதா எதையாவது அரைக்கவும் விழுங்கவும் பயன்படும் சாதனம் என்பது சிலரது எண்ணம். **– அசோகமித்திரன்**

மனிதனின் தரத்தை அளப்பது வெகு எளிது. அவன் எதைச் சொன்னால் சிரிக்கிறான் எனப் பாருங்கள். **– கதே**

ரொம்பப் பெரிய சிரிப்பு; அது வெளிவந்த வேகத்தில் தொண்டையையும் பெயர்த்துக்கொண்டு வந்திருக்குமோ என்று பிரமையூட்டியது. **– ஆதவன் கதையில்**

சந்தோஷத்தை விலை கொடுத்து வாங்கமுடியாது என்று சொன்னவனுக்கு எங்கே வாங்குவது என்றுதான் தெரியவில்லை. **– சி.வி.பாலகிருஷ்ணன்**

யாரென்று தெரியாது, சிரித்துவிட்டுப் போனாய். குளுமை குளுமை– உனக்குத் தெரிந்திருக்கலாம்– சூழலுக்கு அர்த்த மூட்ட, இப்படித்தான் கற்றுப்பழக வேண்டும் சிரிப்பை. வாய்ப்பு நேர்ந்தால், அடுத்தமுறை சந்திக்கும்போது, நான் சிரிப்பேன் முதலில். **– ரவி சுப்ரமணியன்**

செய்தொழில் தெய்வம்; சிரிப்பே சீவியம். **– சிரித்திரன் மகுடவாசகம்**

சிரித்த முகமில்லாதவன் கடை வைக்கக் கூடாது. **– சீனப் பழமொழி**

சிரிப்பு ஒலியோடு கூடிய இன்பமொழி. புன்னகையோ மௌனமான இன்பமொழி. **– ஆபிரிக்கப் பழமொழி**

அங்கதம் என்பது சோகநாடகம் – காலப் போக்கில் அடையும் இடம். காலம் போகப் போக எதுவும் அங்கதத்திற்கு உகந்ததாய் ஆகிவிடும். நினைத்துப் பார்த்தால் இது ரொம்ப அபத்தம் தான். **– லென்னி புரூஸ்**

ஈழத்தமிழர்களின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் இந்திய, அமெரிக்க நாடுகளின் மத்தியில் தமது கருத்தாதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது பல்வேறு ஈழத் தமிழ் அரசியல் ஆய்வாளர்களின் ஒரு பொதுவான கருத்தாக இருக் கிறது.

ஏறத்தாழ கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இந்தியா, அமெரிக்கா ஆகிய இரண்டு நாடுகளும் ஈழத் தமிழர்களது போராட்டத்தை பயங் கரவாத நடவடிக்கையாகவே பார்த்து வந்திருக்கிற இந்நிலையில், எவ்வாறு இவ்விரு நாடுகளையும் எமது போராட டத்தின்பால் கொண்டிருக்கின்ற பார் வையை மீள் பரிசீலனைக்குள் கொண்டு வர வைக்கலாம் என்பது பெரும் கேள்விக்குறியாகவே உள்ளது.

இத்தனை நியாய பூர்வமான அம் சங்களையும் கொண்ட எமது போராட் டம் மேலும் மேலும் இழுத்தடிக்கப் பட்டு வருகிறதே என்பது ஈழத்தமி ழர்கள் மத்தியிலே இருக்கும் பெரும் மனத்தாங்கல்களில் ஒன்று ஆகும்.

ஆனால் தமிழர்களிடம் இல்லாத ஒன்று யூதர்களிடம் உள்ளது. தமது கருத்தாதரவுக் களத்தின் மூலம் தம்மினத தையும் அதன் அடையாளத்தையும் காத்துக் கொள்ளலாம் என்ற ஒரு நிலையை எடுத்துக் கொண்டவர்கள் யூத இனத்தவர்கள்.

இந்த கருத்தாதரவை யூதர்கள் வீராவேசப் பேச்சுகளாலோ, அல்லது

**இந்த கருத்தாதரவை யூதர்கள் வீராவேசப் பேச்சுகளாலோ, அல்லது தமக்கு மேலான சக்தி கொண்டவர்களிடம் வன்முறைக்கு வன்முறை என்ற வகையிலான பொருதல் மனப்பான் மையுடனோ பெற்றுக் கொள்ளவில்லை என்பது முக்கியமானதாகும்.**

தமக்கு மேலான சக்தி கொண்டவர் களிடம் வன்முறைக்கு வன்முறை என்ற வகையிலான பொருதல் மனப் பான்மையுடனோ பெற்றுக் கொள்ள வில்லை என்பது முக்கியமானதாகும்.

பதிலாக தற்போதைய அனைத்துலக நடைமுறைக்கு ஏற்ற வகையிலான இனத்துவத்தின் முக்கியத்துவம், சனநாயகத்தின் அவசியம், பயங்கரவாத எதிர்ப்பு இவற்றை மையமாக வைத்து தமது மேலான இனத்தின் அடையாளத்தை பாதுகாத்து வரு கின்றனர்.




அமெரிக்க தேசத் தின் நலன்களும் இஸ்ரேலின் நலன் களும் எப்பொழுதும் ஒரே நேர் கோட்டில் செல்வன என்பதை உலகில் எத்தகைய பொருளாதார முடை

சாய்வதற்கும் சந்தர்ப்பங்கள் இருந் ததை நன்கு அறிந்திருந்தனர்.

ஆனால் ஆரம்பத்திலிருந்தே இஸ் ரேலியர்கள் ஒற்றுமையுடன் தமது வாக்கு உரிமைகளின் பலத்தினாலும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறான இராச தந்திர அழுத்தங்களினூடாகவும் அவ் வப்போது வந்த அமெரிக்க தலை வர்களின் பேச்சுகள் சிந்தனைகளை எடுபடாது செய்தனர்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முன்வரும் எந்த போட்டி யாளரும் இஸ்ரேலிய நலன்களுக்கப் பால் எதையும் பேசிவிட முடியாத நிலை எப்பொழுதும் உள்ளது. குறிப்பாக இஸ்ரேல் அரசு பலஸ்தீனர் களைக் கையாளும் நிலை குறித்து அமெரிக்கர்கள் பலர் கவலை கொண்டிருக்கலாம். இதனால் இஸ் ரேலையும் பலஸ்தீ னர்களையும் சம நிலையில் வைத்து கையாள வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கலாம், ஆனால் இது தேர் தலில் போட்டி யிடும் ஜனாதிபதி போட்டியாளர்கள் சிந்தித்தும் பார்க்க முடியாத ஒன்றா கும்.




தியேகமான பொதுவான அபிலாசை களும் குறிப்பாக இஸ்ரேலின் பாதுகாப்பும் இவர்களை அமெரிக் காவையும் இஸ்ரேலையும் ஒரு கோட் டின் கீழ் பயணிக்க வைக்க முடி கிறது.

அமெரிக்காவின் பொருளாதார இராணுவ இராஜதந்திர உதவிகள் தங்கு தடையின்றிக் கிடைக்க வைப்ப தில் இந்தக் கருத்தாதரவு குழுக்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். அமெரிக்காவின் கொடுப்பனவுகளிலே அது இஸ்ரேலுக்கு கொடுத்த உதவி களுடன் ஒப்பிடுமிடத்து ஏனைய நாடு களுக்கு கொடுத்த உதவிகள் யாவும் மிக சிறியனவே.

தற்பொழுது சுமார் மூன்று பில்லி யன் அமெரிக்க டொலர் நேரடி வெளி நாட்டு உதவியாக இஸ்ரேல் ஒவ் வொரு ஆண்டும் அமெரிக்காவிடம் பெற்று வருகிறது. அதைவிட அவ்வப போது தேவைகளுக்கு ஏற்ற வகை யில் பண்ட உதவிகளும் இராணுவ உதவிகளும் மேலதிகமாகக் கிடைக்கப் பெறுகிறது.

# இஸ்ரேலிய யூதர்களிடம் உள்ளதும் - ஈழத்தமிழரிடம் இல்லாததும்

**- லோகன் பரமசாமி கட்டுரையிலிருந்து**

இதனால் அனைத்துலக நியதிகளைக் கடிந்து கொள்பவர்களும், பல நாடு கள் மீதும் அதன் தலைவர்கள் மீதும் துரோகத்தனம் கற்பிப்பவர்களும், அனைத்துலக அமைப்புகளையும் அதன செயலர்களையும் வேதனையுடன் திட்டித் தீர்ப்பவர்களும் ஏராளம்.

இத்தகைய நிலைக்கு நாம் இட்டுச் செல்லப்பட்டதற்கு நாமே காரணம் என்று சொன்னால் அதனை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்கள் இன்னும் ஏரா ளம்.

அவ்வாறாயின் உலக நாடுகள் எமது போராட்டத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து வருவது எதற்காக? எமது செயல்திறனில் என்ன குறை இருக் கிறது? என்பவை ஆராயப்பட வேண் டியவைகளாக உள்ளன.

உலகிலே தன்னிச்சையாக வேறு ஒரு நாட்டினதும் குறிப்பாக அமெரிக் காவினது ஒத்தாசை இன்றி நிற்கு மிடத்தில் தனது பிராந்தியத்தில் மிக வலிமை குன்றிய நாடாக அமைந்திருப பது இஸ்ரேல் என்ற நாடாகும். ஏனெ னில் அது தன்னைச் சூழவும் அரபு நாடுகளை எதிரி நாடுகளாக கொண் டுள்ளது.

அதற்கு மாறாக அத்தனை அரபு நாடுகளையும் சமாளிக்கும் வகையில் தந்திரோபாயங்கள் வகுத்து அதற்கு ஏற்ற வகையில் உலக நாடுகளை திசை திருப்பிவிட கூடிய பலம் இஸ் ரேலிடம் இருக்கிறது என்றால் அதற்கு புலம்பெயர் யூத இனத்தின் உலக ளாவிய பலமும் விவேகமுமே கார ணமாகும்.

தமிழர்களுக்கு பலகாலமாக தாம் யூதர்கள் போல பலம் வாய்ந்தவர்க ளாக இருக்க வேண்டும் என்ற கன வும், சிங்கப்பூர் போன்று பொருளா தார பலத்தில் உயர்ந்திட வேண்டும் என்ற நினைவும் இருப்பது குறிப்பாக சொல்லிக்கொள்ள கூடியனவாகும்.

நிலை ஏற்பட்டு வருகின்ற போதிலும் அமெரிக்க ஆட்சியாளர்களை ஏற்றுக் கொள்ள வைப்பதிலேயே யூதர்களின் கருத்தாதரவுப் பலம் அறியப்பட்டு வருகிறது.

இந்தக் கருத்தாதரவுப் பலம் அமெ ரிக்க நன்மதிப்பை கெடுக்க வல்லது என்பதை இஸ்ரேல் என்ற தேசத்தை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளும் போதே அமெரிக்கத் தலைவர்களுக்கு நன்கு தெரிந்துமிருந்தது.

1947 ஆம் ஆண்டு இஸ்ரேல் எனும் நாட்டு எல்லைகளை வரையறை செய் வது குறித்து ஐக்கிய நாடுகள் சபை யில் தீர்மானம் கொண்டு வருவதற்கு அன்றய அமெரிக்க ஜனாதிபதி Har ry S Truman பெரும் பங்காற்றினார். யூதர்களின் தாய்மண்ணை அவர்க ளுக்கு உரிய அங்கீகரிக்கப்பட்ட




தேசமாக மாற்றுவதில் Truman மற்றும் Eisenhower தலைமைத்துவத்தின் பங்கு மிக முக்கியமானதாகும்.

ஆனாலும் இவர்கள் இஸ்ரேலுடன் கூடிய நட்புறவு வைத்து கொள்வது அரபு நாடுகளின் பகையை சம்பாதிக்க வேண்டிவரும் என்பதை அறிந்து கொண டிருந்தனர். அத்துடன் எண்ணை வளம் மிக்க அரபு நாடுகள் அன்றய சோவி யத் சோசலிச குடியரசுகள் பக்கம்

அமெரிக்க காங்கிரசில் ஒரு பதவி பெற்று கொள்ள முனைபவர்கள் கூட இஸ்ரேலிய பாதுகாப்புக்கு எதிராக சிந்திக்க முடியாதவர்களாகவே உள்ள னர் என்றால் யூதர்கள் அமெரிக்க தலைவர்கள் மத்தியிலும் அரச செய லகங்கள் மத்தியிலும் எவ்வளவு தூரம ஊடுருவி உள்ளனர் என்பது புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அமெரிக்காவிலே யூதர்கள் சித றிப்போய் கிடக்கின்றனர். தனிநபர் களாகவும் தனியமைப்புகளாகவும் பரந்துபட்டு தொழிலாற்றுகின்றனர். ஆனால் அமெரிக்க வெளியுறவு கொள்கையை இஸ்ரேலுக்கு ஆதர வானதாக மாற்றுவதில் மிக தீவிரமாக



இத்தனை உதவிகளையும் இஸ் ரேல் எங்கே பயன்படுத்துகிறது என்ற கேள்வியை இது வரையில் அமெ ரிக்கா கேட்டது கிடையாது. உலகி லேயே அமெரிக்காவிடமிருந்து, தான் பெறும் உதவிக்கு கணக்கு காட்ட தேவையில்லாத ஒரு நாடு இஸ்ரேல் மட்டும்தான். இது பலஸ்தீனர்களை கொன்று குவித்தாலும் சரி, இரசாயன

**அனைத்துலக நியதிகளை கடிந்து கொள்பவர்களும், பல நாடு கள் மீதும் அதன் தலைவர்கள் மீதும் துரோகத்தனம் கற்பிப் பவர்களும், அனைத்துலக அமைப்புகளையும் அதன் செயலர் களையும் வேதனையுடன் திட்டித் தீர்ப்பவர்களும் ஏராளம். இத்தகைய நிலைக்கு நாம் இட்டுச் செல்லப்பட்டதற்கு நாமே காரணம் என்று சொன்னால் அதனை ஏற்றுக் கொள்ள மறுப்ப வர்கள் இன்னும் ஏராளம்.**

ஒன்றுபட்டு ஒற்றை மனதுடன் செய லாற்றுகின்றனர்.

இவர்கள் ஒரு மத்திய ஒற்றைத் தலைமையின் கீழ் செயலாற்றுப வர்களோ அல்லது ஒரு சதி நோக் குடன் இஸ்ரேலுக்கு ஆதரவாக செயற படுபவர்களோ அல்ல. பல்வேறு தனிப்பட்ட குழுக்கள் எல்லா விடயத் திலும் ஒற்றுமையைக் கொண்டிருப்ப தில்லை. கருத்து வேற்றுமைகள் அவர கள் மத்தியிலே தாராளமாக இருந்து வருகிறது.

இருந்த போதிலும், தமது தனித்து வமான நட்பான உறவு நிலையும் பிரத

ஆயுதங்களை தயாரித்தாலும் சரி, அணு பரிசோதனைகள் பல செய்தா லும் சரி இஸ்ரேல் அமெரிக்காவின் செல்லப் பிள்ளை, செல்லப்பிள்ளைதான்.

இத்தனை சவால்களையும், ஒரு பல்வேறு கோணங்களைக் கொண்ட ஒற்றுமைமிக்க சமூகமாக அமெரிக்கா விலே சாதனைகளை படைத்து வருகின் றனர் என்றால் இதற்கு தமது சட்டபூர் வமான அமைப்புக்களின் உதவியுடன், அமெரிக்க அரசியல் விழுமியங்களை மதித்து, அதற்கு ஏற்றாற்போல் தமது செயற்பாடுகளை தீவிரமான இராஜதந் திர யுக்திகள் மூலம் துணிவுடன் கையாள் வதே முக்கியமானதாகும்.

# ஸ்கந்தாவுக்கு தனியான ஆரம்ப பாடசாலை அதை எதிர்த்து நேற்று ஆர்ப்பாட்டம்

(சுன்னாகம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குத் தனியான ஆரம்பப் பாடசாலை அமைக்கப்படுவதைக் கண்டித்து நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது. பாடசாலை முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பலர் கலந்துகொண்டனர்.

அதேவேளை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியினதும் அதன் ஆரம்ப பாடசாலையினதும் எதிர்கால வளர்ச்சியை விரும்பாத சில விஷமிகள் விஷமத்தனமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக மேற்படி பாடசாலைச் சமூகம் கவலை வெளியிட்டுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி இசுறு பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டமையாலும் வடக்கின வசந்தத்தின் ஆயிரம் பாடசாலை வேலைத்திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளப் பட்டமையினாலும் அதன் ஆரம்ப பாடசாலையைக் கல்லூரி வளாகத்தில் நடத்த முடியாத சூழ்நிலையில் அதனைத் தனியாக ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையாக இயக்குவதற்கு முன்னாள் அதிபர் சிவாஜியும் தற்போதைய அதிபர் ஆறு திருமுருகன் மற்றும் கல்விச் சமூகமும், தரமான ஆரம்பப் பாடசாலை ஒன்று வேண்டுமென்ற நோக்கில் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையோடு நடவடிக்கை எடுத்துவருவதை விரும்பாத சில விஷமிகள் மாணவர்களின் பெற்றோர்களைத் தவறான முறையில் வழிநடத்தி நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

ஸ்கந்தாவில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சி கருதி ஆரம்பப் பாடசாலையைத் தனியாக நடத்துவது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப்பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் மறறும் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகளை அதிபர்கள், ஆசிரியர்கள் சந்தித்து சமரச உடன்பாடு ஒன்றுக்கு வந்த பின்பும் பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள ஒருசிலர் தானதோன்றித்தனமாக செயற்படுவதால் கல்லூரியின் எதிர்கால வளர்ச்சி பாதிக்கப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பப் பாடசாலையைத் தனியாக அமைப்பதற்குப் பௌதீக வளங்கள் மற்றும் ஏனைய வளங்கள் உள்ளபோதும் இதனைத் தடுத்து நிறுத்த முற்படுபவர்களின உள்நோக்கம் என்னவென்று தெரியாதென பெற்றோர்கள் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் உள்ளிட்ட அனைத்துக் கல்விச் சமூகமும் கேள்வி எழுப்பியுள்ளனர். (44)

# வடமாகாண உப பிரதான தேரருக்கு வவுனியாவில் வரவேற்பு

வடமாகாணத்திற்கான உப பிரதான சங்கதேரோவாக பதவியேற்றுக்கொண்ட அட்டமஸ்கட கல்யாணதிஸ்ஸ தேரோவை வரவேற்கும் நிகழ்வு வவுனியாவில நேற்றுக் காலை 10.30 மணியளவில் இடம்பெற்றிருந்தது.

கண்டி வீதியின் வவுனியா எல்லையில் இருந்து பெருந்திரளான பௌத்த மதத்தவர்களால் வரவேற்கப்பட்ட தேரோ ஊர்தி பவனியின மூலம் வவுனியா நகரை வந்தடைந்ததும் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு முன்பதாக இந்துமத குருவினரால் வரவேற்கப்பட்டதுடன் தமிழ் மக்களாலும் மலர்ச் செண்டுகள் மற்றும் மலர் மாலை கொடுத்து வரவேற்கப்பட்டார். வவுனியா குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குரு கணபதி சித்தர் க.கந்தசாமி குருக்களால் தேரோ பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன். ஊர்தி பவனியூடாக அட்டமஸ்கட விகாரைக்குத் தேரோ அழைத்துச் செல்லப்பட்டு விசேட பூஜை வழிபாடுகளும் சிறப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன.(125)

# பொதுமக்களுடன் நல்லுறவு பேண யாழ். பொலிஸாரின் அணுகுமுறை என்ன?

## கனேடிய நாடாளுமன்றக் குழு ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மக்கள் பொலிஸாருடன் ஒத்துழைக்கிறார்களா என்றும் பொலிஸார் யாழ். மக்களுடன் நட்புறவுடன் பழகுகின்றனரா என்பது குறித்தும் யாழ் விஜயம் செய்த கனடா நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் குழுவினர் அதிக ஆர்வத்துடன் அறிந்து கொண்டனர்.

யாழ். மாவட்டத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டுள்ள மேற்படி கனடா நாடாளுமன்ற குழுவினர் வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபருடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

நேற்றுக் காலை 11.00 மணியளவில் யாழ். பொலிஸ் நிலையத்தில் அவரது அலுவலகத்திலே இச் சந்திப்பு இடம்பெற்றது. இச் சந்திப்பின்போது யாழ். மாவட்டத்தின் தற்போதைய பாதுகாப்பு நிலவரம் மற்றும் பொது மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் எவ்விதமான நட்புறவு காணப்படுகின்றது. பொதுமக்கள் பொலிஸாருடன் இணைந்து செயற்படுகின்றார்களா என்றும் பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே எவ்வாறான ஒத்துழைப்புக்கள் காணப்படுகின்றன. என பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து சென்றுள்ளதுடன் பொலிஸாரின் நடவடிக்கைகள் குறித்தும் அவதானித்துச சென்றுள்ளனர். (எஸ்)

# சுனாமி எச்சரிக்கை மையம் மண்டைதீவில் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் சுனாமி எச்சரிக்கைக் கோபுரம் அமைக்கும் நடவடிக்கை குறித்து பரிசீலிக்கப்பட்டுவருவதாகத் தெரியவருகின்றது.

2004 ஆம் ஆண்டு இந்தோனேஷியா சுமாத்திராத் தீவுகளில் ஏற்பட்ட பூமியதிர்வின் காரணமாக ஏற்பட்ட சுனாமித் தாக்கம் இலங்கையையும் பாதித்தது. அதனால் பல்லாயிரம் உயிர்கள் பலியாகியிருந்தன. இதன் பின்னர அவ்வாறான இயற்கை அனர்த்தம் ஏற்படுமிடத்து அதனை முன் கூட்டியே பொதுமக்களுக்கு அறியத்தரும் பொருட்டு இலங்கையின் பல பகுதிகளிலும் கடற்கரையோரங்களில் சுனாமி எச்சரிக்கைகக் கோபுரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் கீழ் வடபகுதியில் குறிப்பாக யாழ். குடாநாட்டிலும் சுனாமி எச்சரிக்கைக் கோபுரங்கள் பல நிறுவப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கு, வடமராட்சி பருத்தித்துறை, தீவகப் பகுதிகளிலும் இவ்வாறு சுனாமி எச்சரிக்கைக் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதன் கீழ் மண்டைதீவுப் பகுதியிலும் அவ்வாறு சுனாமி எச்சரிக்கைக் கோபுரமொன்றை நிறுவுவதற்கு அங்குள்ள கடற்படையினர் முயற்சி மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது. இவ்விடயம் குறித்து முதற்கட்ட நடவடிக்கையாக யாழ். செயலக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துடன் கடற்படையினர் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்ததாகவும் தெரியவருகிறது.

இதற்கான கருவியொன்றும் தயார் நிலையில் யாழ். செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக் காரியாலயத்தில் காத்திருப்பதாகவும் தெரியவருகிறது. (பா)

# போக்குவரத்து படி வேண்டும் மருத்துவ அதிகாரிகள் கோரிக்கை

(கொழும்பு)

எரிபொருள் விலை அதிகரிப்பின் காரணமாக, தமது போக்குவரத்துப்படியை 33,000 ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென அரசாங்கத்திடம் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரியுள்ளது. இந்த அதிகரித்த போக்குவரத்துப்படியை வழங்காவிடில் தாம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவேண்டியிருக்கும் எனவும் மேலும் கூடுதலாக தனியார்துறைக்குச் செல்ல நிர்பந்திக்கப்படுவோம் எனவும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் சங்கல்ப மாரசிங்க கூறியுள்ளார்.

கடந்த ஜனவரியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நடந்த பேச்சுவார்த்தையின் போது, குழப்ப நிலையிலும் கடமைக்கு வருதல், ஒழுங்கான கடமை நேரமின்மை மற்றும் போக்குவரத்து என்பவற்றுக்காக வழங்கப்படும் 12,500 ரூபா படியை 33,000 ரூபாவாக அதிகரிப்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால், அது இன்னமும் வழங்கப்பட வில்லை என அவர் தெரிவித்தார். இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் ஒருவர் சராசரியாக 62,000 ரூபாவை சம்பளமாக பெறுவதாக ஜனாதிபதியும் சுட்டிக்காட்டினார் என டாக்டர் மாரசிங்க கூறினார். அதே வேளை, அரசாங்க வைத்தியர்களின் ஆரம்பச் சம்பளம் மாதத்திற்கு 28,000 ரூபாவாகவும் ஆகக்கூடிய சம்பளம் 56,000 ரூபாவாகவும் உள்ளது. இதுதான் வைத்தியர்களின் தற்போதைய நிலை வைத்தியர்கள் சம்பள விடயத்தில் புறக்கணிக்கப்படுகின்றனர் எனவும் அவர் கூறினார்.

### மக்கள் பேராட்டம்...

நோக்கிச் செல்லமுற்பட்டபோது பொலிஸார் அவர்களை தடுத்தனர். பொலிஸார் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை வீசி எறிந்து எதிர்ப்பை வெளியிட்டனர். நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதே பொலிஸாரின் முதன்மைக் கடமையாகும். போராட்டங்களை தடுக்கும் அவசியம் கிடையாது. எனினும், எந்தவொரு நடவடிக்கைக்கும் ஓர் எல்லையுண்டு. எல்லை மீறிச் செயற்படும் போது அதனை தடுக்க வேண்டியது எமது கடமையாகும்.

சிலாபம் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் பூரண விசாரணை நடத்தப்படும். பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் இராணுவத்தினர் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்திய பல சந்தர்ப்பங்களை சுட்டிக்காட்ட முடியும். பாரிய தியாகங்களுக்கு மத்தியில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டனர். மீண்டும் நாட்டை பின்நோக்கி நகர்த்த அனுமதியளிக்க முடியாது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

### இந்திய உதவியுடன்...

நாட்டு அரசுகளும் தீர்மானித்திருந்தன. தற்போது இந்த நடைமுறையும் தாமதமாகுகின்றதென தகவல்கள் வெளியாகியுள்ளன. அத்துடன் இவ் வீட்டுத்திட்டத்துக்குரிய பணம் பயனாளிகளுக்கு இலங்கைப் பெறுமதியில் வழங்கப்பட இருக்கின்ற காரணத்தால் இலங்கை ரூபாவில் வீட்டின் பெறுமதி குறைவடைகின்ற நிலை காணப்படும் என்றும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய வீட்டுத்திட்டத்தின் முன்னோடி திட்டங்கள் யாழ்ப்பாணப் பிரதேச செயலக பிரிவில் 40 வீடுகளும், நல்லூர் பிரதேச செயலக பிரிவில் 50 வீடுகளும், தெல்லிப்பளைப் பிரதேச செயலக பிரிவில் 30 வீடுகளும், காரைநகர் பிரதேச செயலக பிரிவில் 30 வீடுகளும் மொத்தமாக 150 வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. இவ்வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் விழா இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவினால் கடந்த வருடம் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி அரியாலையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வீடமைப்புத் திட்டத்தில் காணப்படும் தடைகள் மற்றும் தாமதங்களை இயன்றவரை அகற்றுவதற்குத் தாம் முயன்று வருவதாகவும் யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

### பல்கலைக்கழக...

நிறுத்தம் செய்ய தீர்மானித்துள்ளனர். கல்விசாரா ஊழியர்கள் தமது சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டுமென சென்ற வருடமும் கேட்டிருந்தனர். கடந்த 2 ஆம் திகதி இவ்விடயம் குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் பேசியபோது 14 நாட்களுக்குள் அவர்களின் குறைகள் பற்றி அறிக்கை ஒன்றை வெளியிடுவதாக ஆணைக்குழு தெரிவித்தபோதும் இதுவரை எதுவும் நடக்கவில்லை என சங்கத்தின் இணைத் தலைவர் ஆர்.எம்.சந் திரபால கூறினார்.

அரசாங்க ஊழியர்கள் அனுபவிக்கும் பல நன்மைகள் எமக்கு கிடைப்பதில்லை. எமக்கு இளைப் பாற்று சம்பளம் இல்லை. வீட்டுக் கடன் வசதி, காப்புறுதித் திட்டங்கள் இல்லை என அவர் குறிப்பிட்டார். சம்பள அதிகரிப்புடன் நாம் இந்த நன்மைகள் எமக்கு தரப்பட வேண்டும் என கோரவுள்ளோம். அத்துடன் 25 வீத மேலதிக படியும் எமக்கு வழங்கப்பட வேண்டுமென அவர் மேலும். தெரிவித்தார்.

### குருநகர் வைத்தியசாலையில்...

அங்கே இரவு நேரங்களில வைத்தியர் கடைமையிலிருப்பதில்லை. தாதியர்களே பிரசவத்தைப் பார்க்கின்றனர். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்காக வைத்தியருக்கும் அம்புலன்ஸிற்கும் அறிவித்தபோதும் அப்புலன்ஸ் வருவதற்கு தாமதம் ஏற்பட்டது. எனவே தனியார் வாகனத்தில் கொண்டு செல்ல முற்பட்டபோது நோயாளியை தூக்கிச் செல்வதற்குரிய 'ஸ்ரெச்சர்' வைத்தியசாலையில் இல்லை. எனவே பிரசவ வேதனையுடன் அப்பெண்ணைச் சிரமத்தின் மத்தியில் தூக்கிச் செல்ல வேண்டிய நிலைஏற்பட்டது.

மக்கள் செறிந்துவாழும் சூழலில் அமைந்துள்ள இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் அடிப்படை வசதிகளையும் உபகரணக் குறைபாடுகளையும் நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

### பட்டதாரிகளுக்கு...

காலத்தில் 6 ஆயிரம் ரூபா மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படுமென பொதுநிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ரி.பி அபேகோண் தெரிவித்துள்ளார். பயிற்சியின் பின்னர் இப்பட்டதாரிகள் நிரந்தர சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

இதேநேரம் மாத்தளை மாவடடத்தில் மேலும் 246 பட்டதாரிகள் அரச சேவையில் இணைத்துக் கொளளப்பட்டுள்ளனர். மாத்தளை ரத்தொட்ட, லக்கல, தபுள்ளை, தேர்தல் தொகுதிகளை சேர்ந்த 246 பட்டதாரிகளுக்கே அபிவிருத்தி உதவியாளர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

### பறிக்கப்படுகிறது...

வைக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்தின் அடக்கு முறைகளை மீறி மக்கள் எதிர்ப்பு நாளுக்கு நாள் வலுவடைந்து செல்கின்றது என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

# இலஞ்சம் கொடுக்க முயன்றதால் தொழில் தகைமை இழந்த தமிழர்

(லண்டன்)

இலங்கைத் தமிழ் வைத்தியர் ஒருவர், இலஞ்சம் கொடுக்க முயன்றதால் இங்கிலாந்தில் வைத்தியராக பணி புரிகின்ற தகைமையை இழந்துள்ளார். முருகேசு விநாயகமூர்த்தி (வயது - 62 என்ற இவர், புலிகள் இயக்கத்தை அமெரிக்காவின் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கப் பட்டியலில் இருந்து நீக்குகின்றமைக்கு அமெரிக்க அரச அதிகாரிகளுக்கு இவர் இலஞ்சம் வழங்க முயன்றார் என்ற குற்றச்சாட்டில் அமெரிக்கச் சிறையில் நான்கரை வருடங்கள் தண்டனை அனுபவித்துள்ளார். ஆனால் புலிகள் இயக்க உறுப்பினரோ மற்றும் ஆதரவாளரோ அல்லர் என்று தெரிவித்து உள்ள வைத்தியர் குற்றத்தை 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் புரிந்தமையை ஒப்புக்கொண்டுள்ளார்.

இதேவேளை முன்பு வைத்தியசாலை ஒன்றில் சத்திர சிகிச்சை நிபுணராக கடமை ஆற்றியவர். மீண்டும் கடமைக்கு திரும்ப அனுமதிக்க வேண்டும் என்று கேட்டிருந்தார். பொது வைத்திய ஒழுக்காற்று சபை இவரின் விண்ணப்பம் தொடர்பாக விசாரித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பில் வைத்தியராக செயல்படுகின்றமைக்கான தகுதியை சிறைத் தண்டனைத் தீர்ப்பு, நடத்தை ஆகியவற்றால் இவர் இழந்து விட்டார் என்று கூறப்பட்டுள்ளது. இவர் வைத்தியர் என்பதையும் இலங்கைப் பிரச்சினையில் தமிழர்களுக்கு அமைதித் தீர்வு கிடைக்க வேண்டுமென பாடுபட்ட மனிதாபிமானி என்பதையும் ஒழுக்காற்று சபை அடிப்படையில் ஏற்றுக் கொண்டது. ஆனால் இலஞ்சம் வழங்க முயன்றமை பாரதூரமான குற்றம் ஆகும், எனவே இவர் வைத்தியராக பணியாற்ற முடியாது என்று அறிவித்துள்ளது.

## கைக்குண்டு வெடிப்பு மூவர் காயம்

பாறையை பிளப்பதற்காக வைக்கப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்று தவறுதலாக வெடித்ததில் அநுராதபுரம், களுத்தாகம பிரதேசத்தில் மூவர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடமையில் இருந்த ஊழியர்கள் கைக்குண்டை சோதித்துப் பார்க்கும் போது இவ்வெடிப்புச் சம்பவம் ஏற்பட்டுள்ளது.

## உணவு நஞ்சானது ஏழு பேர் பாதிப்பு

உணவு விஷமடைந்ததனால் இரு தேரர்கள் உள்ளிட்ட ஏழு பேர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அநுராதபுரத்தில் விகாரையொன்றில் நேற்று நண்பகல் உட்கொண்ட உணவே விஷமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண கூறினார்.

இரண்டு தேரர்கள், இரு பெண்கள் மற்றும் 3 நபர்களே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

## வர்த்தகர் வெட்டிக்கொலை

(கொழும்பு)

தொம்பே, பஹல தொம்பே பிரதேசத்தில் வைத்து ஒருவர் கூரிய ஆயுதங்களால் வெட்டி கொலைசெய்யப்பட்ட சம்பவமொன்று நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பியகம விலேஜ் ஹோட்டலின் உரிமையாளரான சுரங்கி முதலாளி என்று அழைக்கப்படும் ஆர்.டீ.பீ.ஜயரத்ன (வயது - 65) என்ற பிரபல வர்த்தகரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். இவருக்குச் சொந்தமான தோட்டம் ஒன்றில் வைத்து காலை வேளையில் கூரிய ஆயுதங்களால் முகத்திலும் தலையிலும் வெட்டப்பட்ட நிலையில் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தொம்பே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## குவைத் வர்த்தகரை ஏமாற்றிய இலங்கையர்

குவைத் வர்த்தகர் ஒருவர் இலங்கை முகவர் ஒருவரினால் பணமோசடி செய்யப்பட்டுள்ளதாக அரபு ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குவைத் வர்த்தகருடன் இணைந்து கூட்டு தொழில் செய்வதாகக் கூறி, இலங்கையர் ஒருவர் பணம் பெற்றுள்ளார். பின்னர் அவர் தன்னை ஏமாற்றியுள்ளதாக குவைத் வர்த்தகர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். மேலும் தன்னிடமிருந்து 67,000 டினாரைப் பெற்ற நிலையில் அவர் தன்னுடனான தொடர்பை துண்டித்துக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர் தற்போது இலங்கைக்கான பிரயாணத்தை மேற்கொண்டுள்ளதாக பொலிஸ முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**அமரர் சரஸ்வதி தம்பித்துரை**

கடந்த 06.02.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் சரஸ்வதி தம்பித்துரை அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 21.02.2012 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை 22.02.2012 புதன்கிழமை காலை12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் அத் தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

M.S. லேன்,<br>
கோண்டாவில் கிழக்கு,<br>
கோண்டாவில். (இ) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி இராசன் அன்னம்மா

வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **இராசன் அன்னம்மா** அவர்கள் 16.02.2012 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி வள்ளியம்மையின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற இராசனின் அன்பு மனைவியும், சந்திரா, இரட்ணேஸ்வரி, அரியரட்ணம் (அரி), காலஞ்சென்ற ஆனந்தன் உதயன் மற்றும் றஞ்சனா (கொலன்ட்), யோகா, றஜனி ஆகியோரின் தாயாரும், நடராசா, துரைஐயா, சுந்தர்லிங்கம் (கொலன்ட்), ஸ்ரீதரன், சாந்தாதேவி ஆகியோரின் மாமியாரும், துஷ்யந்தன் (துஷி), துஷாந்தன், துஷியந்தி, அனுஷியா, ஷரண்ஜி, விதுர்ஷன், விதுர்ஷிகன், ஆரணி, அசோக், பார்த்தன், தக்சயன், ஆரபி, சுபிர்ஷன் (கொலன்ட்), ஜெரூன் (கொலன்ட்), ஜனனி (கொலன்ட்), பிரியங்கன், த்ரிஷா, தருண் ஆகியோரின் அன்புப் பேத்தியும், காருண்ஜாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 22.02.2012 புதன்கிழமை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு. தெற்கு, தகவல்:<br>
வட்டுக்கோட்டை. (C/157) பேரன் ந.துஷ்யந்தன்

# ரஷ்யக் காதலர்களுக்கு மட்டக்களப்பில் திருமணம்



(கொழும்பு)

ரஷ்யா நாட்டைச் சேர்ந்த இரு இளம் காதலர்கள் இலங்கைக்கு சுற்றுலாப் பயணியாக வந்து இந்நாட்டு விவாகப்பதிவு சட்டத்தின் கீழ் மட்டக்களப்பு, பாசிக்குடா மாலுமாலு சுற்றுலா விடுதியில் திருமணம் செய்து கொண்டனர். இவர்கள் சிங்கள மற்றும் தமிழ் ஆகிய கலாசாரங்களின் அடிப்படையில் திருமணம் செய்து கொண்டனர்.

இந்தத் திருமணத்தை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் றூமி ஜ்.பரின் வேண்டுகோளில் பாசிக்குடா மாலு மாலு சுற்றுலா விடுதி நிர்வாகம் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்தது.

இதற்கமைய ரஷ்யாவச் சேர்ந்த 26 வயதுடைய ஒல்கா யூரீவ்னா கொர்பேரா (Yuriewna Gorbhera) வும் அவரது 26 வயது காதலியான பிளட்மிர் அலெக்சான்றிச் இந்துஹாகோ- ர்ஸ்கி (INTUH AKO-RSKIY) யும் இலங்கை ஜனநாயகக் குடியரசின் விவாகச் சட்டப்படி வாழைச்சேனை பிறப்பு இறப்பு பதிவுகாரர் திருமதி யோகராஜா முன்னிலையில் தமிழ்ப் பதிவு புத்தகத்தில் ஒப்பமிட்டு திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர்.

# மீனவர் போராட்டம் நேற்று முற்றுப்புள்ளி

(கொழும்பு)

கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்ற தீர்மானத்தை கைவிட்டுள்ளதாக, நீர்கொழும்பு கடற்கரை வீதி மற்றும் குடாபாடுவ ஒன்றிணைந்த கடற்றொழில் சங்கம் தெரிவித்துள்ளது.

பிரதி அமைச்சர் சரத்குமார குணரத்ன மற்றும் மேல் மாகாண கடற்றொழில் அமைச்சர் நிமல் லன்சா ஆகியோருடன் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக சங்கத்தின் தலைவர் டென்ஸிஸ் பெணான்டோ அதனைக் கூறினார்.

எரிபொருட்களுக்கான மானியத்தை உரிய முறையில் வழங்குவதற்கான உறுதிமொழி வழங்கப்பட்டதை அடுத்து, மீனவர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக பிரதி அமைச்சர் சரத் குணரத்ன தெரிவித்துள்ளார்.

# விலை உயர்விற்கு எதிர்க்கட்சி விளக்கம்

(கொழும்பு)



தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் விலை உயர்விற்கான காரணங்கள் பற்றி ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் விளக்கமளித்துள்ளார். அதில் மிஹின் லங்கா நிறுவனம் தற்போது 1000 கோடி ரூபாவிற்கு மேல் நட்டமடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டினால் ரூபாவின் பெறுமதியை குறைப்பதற்கும் வட்டி வீதத்தை உயர்த்துவதற்கும் நிவாரணங்களை குறைப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் குற்றம் சுமத்தினார்.

இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரசாங்கம் எரிபொருள் விலை உயர்வு தொடர்பாக தவறான விளக்கங்களை அளித்து வருவதாகவும் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கூறியுள்ளார். சரவதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காகவே அரசாங்கம் எரிபொருள் விலையை உயர்த்தி நிவாரணங்களை குறைப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வாரப்பத்திரிகையில் கடமையாற்றுவதற்கு உதவி ஆசிரியர், அலுவலகச் செய்தியாளர்கள், ஒப்புநோக்குனர்கள் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. க.பொ.த (சா.த), க.பொ.த உயர்தரத்தில் தமிழ்ப் பாடத்தில் திறமைச்சித்தியுடன் எழுத் தாற்றல் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். பத்திரிகைத்துறையில் முன் அனுபவம் விரும்பப்படும். கடித உறையின் மீது விண்ணப்பிக்கும் பதவிப்பெயரை குறிப்பிட்டு இல.127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 பெப்ரவரி 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.